# LIFE

OF

# SRI PARAMAHAMSA SACHITHANANTHA YOGEESWARAR.

PRINTED AT
SOLDEN & CO., MADRAS,
18th August 1922.

Right Registered.] [Price 0—6—0.

1
172

# முக்கிய கவனிப்பு.

பினங், சிங்கப்பூர் வெளி ஆர்டர்களுக்கு, வி.பி. இருந்த போதிலும் முன் அட்வான்சாய், ரூபா அனுப்பப்பட்டவர் களுக்குமாத்திரம் புஸ்தகங்கள் அனுப்பப்படும்.

இந்நூலாசிரியரால் வெளியாகிய நூல்கள்.

அனேக ஆப்டோன் பிளாக்படங்கள் சேர்த்து எழுதிய "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரகஸ்யம்" ரூ. அ. காலிகோபயிண்டுடையது விலை .... 2 14

இதற்குத் திருஷ்டாந்தமாய் ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை இரண்டாம் பதிப்பு காலிகோ பயிண்டு விலை .... 2 0

ஞானார்த்தமாய் எழுதிய ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம் காலிகோ பயிண்டு விலை... ... ... 2 4

கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ சச்சிதாநந்த யோகீசுவரர் பூர்வஜன்ம இச்ஜன்ம சரித்திரம் விலை .... 0 6

பூஜை அறைக்கு வேண்டிய உயர்ந்த பரிமளமுள்ள $1\frac{1}{4}$ மணிநேரம் எரியும் ஊதுவத்தி 100-க்கு விலை ... ... ... ... 2 0

இவைகள் வேண்டுபவர்கள் அடியில் கண்ட விலாசத்திற்கு எழுதிப்பெறலாம்.

A. ராஜகோபால் அண்டு கோ.,
107-ஸ்டிராஹன்ஸ் ரோட், சூளைப்பட்டாளம்,
பேரம்பூர் பாரக்ஸ் போஸ்ட்டு, சென்னை.

தத் ஸத்

ஸ்ரீ பரப்ரஹ்மணே நம:

வெட்டவெளி பரம்பரையில்வந்த

ஸ்ரீ நித்யாநந்த சுவாமிகளின் பிரிய சிஷ்யராகிய

கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதாநந்த

யோகீஸ்வரர் அவர்களின்

# பூர்வஜன்ம இச்ஜன்ம சரித்திரம்.

இது,


**K. ராமசந்த்ர அய்யர் B.A.,**

ரிடைர்ட் தாசில்தார், திருவடமருதூர்


அவர்களால் பார்வையிடப்பட்டு,


சென்னை ஸோல்டன் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.



[*All Rights Reserved.*]


விலை அணா 6


*For copies apply to:—*

**A. RAJAGOPAL & CO.,**

***107, Strahan's Road,***

**Perambur Barracks, MADRAS.**

# புஸ்தகங்களின் விபரம்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| அனேக படங்களுடன்கூடிய ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம் உயர்ந்த காலிகோ பையிண்டு விலை. ... ... ... | 2 | 14 |

இது, இங்கிலீஷ் பாஷையில் அச்சாய்க்கொண்டு வருகின்றது; வேண்டுபவர்கள் விலாசம் தெரிவித்தால் பெயர் ரிஜிஸ்ட்டர்செய்து வெளிவந்தவுடன் தெரிவிக்கப்படும்.

| | ரூ. | அ. |
|---|---|---|
| ஸ்ரீ கிருஷ்ணார்ஜுன சம்வாதரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை இரண்டாம் பதிப்பு காலிகோ பயிண்டு விலை. ... ... ... | 2 | 0 |
| ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம் காலிகோபயிண்டு விலை ... | 2 | 4 |
| ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர் பூர்வ ஜன்ம இச்ஜன்ம சரித்திரம் விலை. ... | 0 | 6 |

இது, 5 அல்லது 10 புஸ்தகங்களுக்குக் குறையாமல் வாங்கினால், வி. பி. சார்ஜ்சு அதிகமாய்க் கூடிவரும்.

இவைகள்யாவும்,

A. ராஜகோபால் அண்டு கோ.,

107-ஸ்டிராஹன்ஸ் ரோட்,

சூளைப்பட்டாளம்,

பேரம்பூர் பாரக்ஸ் போஸ்டு, சென்னை.

இவ்விலாசத்திற்கு எழுதிப்பெறலாம்.




கடப்பை ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்தயோகீஸ்வரர்,

**1865௵ பிப்ரவரி௴ 26௳ குருவாரம்**

ஸிம்மலக்னத்தில் ஜனனம்.

# முகவுரை.

ஓ சகோதரி! சகோதரர்களே!

ஆஹா! நமதுகாலம் எப்படி வியர்த்தமாய்ப் போகின்றது! காலமென்னும் சர்ப்பம், மரணமென்னும் வாயைத் திறந்துகொண்டு நம்மை விழுங்க காத்துக்கொண்டிருக்கின்றது. கிடைக்கத்தகாத மானவ ஜனனமெடுத்து, சொல்லக்கூடாத கஷ்டங்களையெல்லாம் அனுபவித்து, கடைசியில் ஜீவன் இந்தச்சரீரத்தை விட்டு யமதண்டனைக்குப் பாத்திரமாகச் செய்யும் அஞ்ஞானத்தை விட வேறொன்றுமில்லை. ஆதலால், சகல துக்கங்களையும் ஒழித்து நித்யானந்த பதவியை அடையவந்த மனிதன், நானேயென்று பிரதி மானவ ஜனங்களும் எண்ணவேண்டும். இதைவிட வேறே நல்லகதி ஒன்றுமில்லை. ஆதலால், சுலப ராஜபாட்டையாகிய பக்திமார்க்கத்தைத் தெரிந்துகொண்டு அதுபோல் அனுஷ்டித்துவர, இந்த புஸ்தகமே மிகவும் முக்கியமானதாயிருக்கின்றது. இதனால் திருட வைராக்கியம் உண்டாய், அந்த வைராக்கியத்தினால் மோக்ஷமென்னும் பதவியை தப்பாமல் அடையலாம். பிரபஞ்ச விஷயத்திலேயே மனம், ஸதா நாடிக்கொண்டிருக்கின்றது. இப்படிப்பட்ட பிரபஞ்ச விஷயங்கள் யாவும் கனவைப்போன்றதேயன்றி சத்தியமானதன்று. ஆதலால் ஸாஸ்வத சௌக்யபதவிக்காக பாடுபடவேண்டுமேயொழிய சிலதுநாளைக்குள் அழிந்து போகத்தக்க வஸ்துக்களுக்காக பாடுபடலாகாது என்று அறியக்கடவீர்களாக.

ஸ்ரீ ஸர்வ பரிபூர்ண பர ப்ரஹ்மணே நம:

# ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரகஸ்யம்

## முகவுரை.

உலகத்திலுள்ள ஜனங்கள் ஒரு மாத்தின் கிளையைக் குறிப்பிட்டு அதன்மத்தியில் காட்டும் மூன்றும்பிறையைப் போலவும்; ஆகாசத்தில், ஸப்த ரிஷிகளின் மண்டலங்களைக் குறிப்பிட்டு வசிஷ்டரது பார்யை பதிவ்விரதா சிரோன்மணியாகிய அருந்ததி தேவியை விவாஹ காலத்தில் குறிப்பிட்டுக் காட்டுவது போலவும்; இந்த "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரகஸ்ய" மானது, சூக்ஷ்ம சொரூபமாயிருக்கும் பரப் பிரம்மத்தை உபதேசிக்கின்றது. ஜீவசாக்ஷியாகிய கூடஸ்தனும் ஈசுவரஸாக்ஷியாகிய பரப்பிரம்மமும் தானென்று அறியாமல் ஸ்தூல சூக்ஷ்ம காரணங்களினால் உண்டாகிய தேகமே தானென்று அபிமானம் வைத்து நான் பிராம்மணனென்று பிரமையடைந்து அனேக யுக வருஷங்களாய்ப் புருஷன், கால சக்கரத்தில் (சுழல்காற்றில் அகப்பட்டுக்கொண்ட செத்தையானது கிறு கிறுவென்று சுழல்வதுபோல்) சுழன்றுகொண்டு, நாநாவித ஜந்துக்களின் யோநிகளில் பிறந்து பிறந்து புண்ணிய பாப மிசிர கர்மங்களைச் செய்துகொண்டு சுகதுக்கங்களை அனுபவித்துப் பிறந்து கொண்டும் இறந்துகொண்டுமா இருக்கின்றார்கள். 'பிரம்மமே நான்' என்று தெரிந்துகொள்ளும் வரையில் ஜனன மரணங்கள் வந்துகொண்டேயிருக்கும். ஆதலால், உலகத்தில் ஸ்திரீ புருஷ

ரூபமாய் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் மானிட ஜனங்களெல்லாம், மாயையால் கட்டுப்பட்டு மிகவும் அகாதமான சம்சாரமென்னும் பாழுங்கிணற்றில் வீழ்ந்து, தனுசை என்னும் வியாதியினுல் பீடிக்கப்பட்டு மின்னலைப்போல் க்ஷணனேரம் உண்டாகும் ஸ்திரீபோகங்களின் அற்ப சுகங்களுக்குட்பட்டு, எப்பொழுதும் வருத்தமடைந்துக்கொண்டிருப்பார்களே அல்லாமல் நித்தியானந்த பதவியைக் கோரார்கள். இவர்கள்செய்வது, எப்படி யிருக்கின்றதென்றால், காட்டில் பள்ளத்தின்மீது செழுமையாய் வளர்த்து வைக்கப்பட்ட பயிரைப்பார்த்து, அதனுல் கேடு சம்பவிக்குமென்னும் விசாரமில்லாத யானையானது அந்தப் பயிரை மேய்வதற்காக துரிதப்பட்டுச்சென்று அந்தப் பாழும் பள்ளத்தில் வீழ்வதுபோல் இருக்கின்றது.

"ஸப்தமாயாவ்ருதோ நைவ தமஸோ யாதி புஷ்கரே
பிந்நேதமஸி சைகத்வ மேகமேவாநு பஸ்யதி."

என்னும் சுருதிரீதியாய் (1) 'சப்த' த்தினுல் ஸர்ப்பமும், (2) 'ஸ்பர்ச' த்தினுல் ஸமரீ மிருகங்களும் (3) 'ரூப' த்தினுல் விட்டில் பூச்சிகளும், (4) 'ரஸ' த்தினுல் மச்சங்களும் (5) 'கந்த' த்தினுல் தும்பிகளும் நசிக்கின்றன. அதாவது, (1) பாம்பாட்டியானவன் மோடிவாசிக்கும்போது, ஸர்ப்பங்கள் புற்றிலிருந்து வெளிவந்து அந்த சப்தத்தைக் கேட்டு, சந்தோஷித்து தன்னை மறந்து ஆடிக்கொண்டிருக்கும் சமயத்தில் மேற்படி பாம்பாட்டியால் பிடிபட்டு அநேக பாதைகள் அடைந்து மரணமடைவதுபோலவும், (2)காட்டிலுள்ள ஸமரீ மிருகங்கள் வேடன்வலைக்கு அகப்படாமல் ஓடும்பொழுது வாலிலுள்ள கேச (ரோம)ங்கள் புதரில் அகப்பட்டுகொண்டு ஸ்பர்சத்தினுல் ஓட ஸாத்தியமாகாமல் நின்றுவிடுவதனுல் அப்போது வேடன்கையில் அகப்பட்டு மரணமடைவதுபோலவும், (3) விட்டில் பூச்சிகள் தீபப்பிர

காச ரூபத்தைப்பார்த்து பழமெனப் பிரமித்து அதில் வீழ்ந்து மரணமடைவதுபோலவும், (4) தூண்டின்முள்ளில் ரசரூபமாகிய மாம்சம்கோர்த்து ஜலத்தில் போட்டவுடன் மச்சங்கள் நா ருசிக்காக ஆசைப்பட்டு தூண்டின்முள்ளில் அகப்பட்டு மரணமடைவதுபோலவும், (5) சம்பங்கிபுஷ்ப கந்தரூபமான வாசனைக்கு ஆசைபட்டுத் தும்பிகள் அப் புஷ்பத்தில் சேர்ந்து நசிப்பதுபோலவும், புருஷர்களுக்கு பூர்வ ஜன்மார்ஜ்ஜித புண்ணிய விசேஷத்தினுல் துர்லபமான மானவ ஜன்மம் உண்டாகியும், ஈசுவர பக்தி யில்லாமல் விசேஷ ஆசையுடையவர்களாய், சம்சாரமென்னும் பாழும் பள்ளத்தில் வீழ்ந்து நசிக்கின்ருர்கள். ஆதலால், சின்னுளில் அழியும் இத்தேகத்தை நம்பி வீணுகக் காலம் கழித்துக் கெடாமல் இத்தேகமெடுத்தது முக்கியமாய் மோக்ஷத்தை யடைவதற்கெனவே தெரிந்துகொள்ளவேண்டும்.

மோக்ஷமென்ருல், பந்தத்திலிருந்து விடுதலை அடைதலேயாம் அப்பந்தம், பாஹ்யம் ஆந்தரம் என இரண்டு வகைப்படும்.

பாஹ்ய பந்தமாவது:—எனது வீடு, எனது மாடு, எனது பார்யாள், எனது புத்திரர்கள், எனது புத்திரிகைகள், எனது சரீரம், எனது பூமி, எனது தோட்டம், எனது துரவுகள் என்று தனதல்லாத வேறு வஸ்துக்களைத் தனதாகப் பாவிப்பது.

ஆந்தர பந்தமாவது:—காம, குரோத, லோப, மோஹ, மத, மச்சர, டம்ப, தர்ப்ப, ஈர்ஷை, அசூயை, இந்த குணங்களினுல் புருஷனுக்கு பந்தம் உண்டாகின்றது.

இந்த பந்தம் அஞ்ஞானத்தினுல் எற்பட்டதே யன்றி வேறன்று. இவ் வஞ்ஞானத்தை விசாரிக்குமளவில் இது, கானல் நீரைப்போல் ஜீவனுக்கு அனேகஜன்மங்க

ளாய் வந்து கொண்டிருக்கும் காரணசரீரத்தின் வாசனை யினால் இவனுக்கு தாரேஷணை (பார்யாளின்மீது ஆசை) புத்ரேஷணை (புத்தரர்களின் மீது ஆசை) தனேஷணை (பொன்வெள்ளி முதலானவைகளின்மீது ஆசை) இவை களை ஜீவப் பிரம்மைக்யத்தில் எழுதியிருக்கின்றோம். இது முக்யமாய் கிரகிக்க வேண்டியவிஷயம் இதைப்பார்ப்பீர்க ளாக. இந்த ஈஷணாத்திரயங்கள் ஜீவனுடன்கூடவே சூக்ஷ்மசரீரத்துடன் அணுசொரூபமாய் (கண்களுக்குக் காணப்படாத சிறிய வஸ்துவாய்க் கிளம்பி) அவனவன் கர்மத்திற்குத் தக்கபடி அந்தந்த தாயின் கர்ப்பத்தி லிருக் கும் பிண்டத்தில் போய்ப் பிரவேசித்து சிசுவாய்ப் பிறந்த போது அந்த சிசுவுடன் கூடவே மேற்சொல்லிய காமக் குரோதாதிகளும், ஈஷணாத்திரயங்கள் யாவும் அடங்கி யிருந்து, பிறகு சிசுவானது விருத்தியடைய வடைய இந்த காமக்குரோதாதிகளும் ஈஷணாத்திரயங்களும் சிசுவுடன் கூடவே விருத்தியாகி, இடைவிடாமல் அவனுடன்கூடவே தொடர்ந்துகொண்டே வருகின்றன. ஆதலால், நாம் எல் லோரும் சிறுபிள்ளைகளா யிருந்தபோது, இந்த ஈஷணாத் திரயங்களும் காமக் குரோதாதிகளும் நமக்கில்லாமலிருந் தன; பிறகு நாம் விருத்தியடைய வடைய, இந்த ஈஷணாத் திரயங்களென்னும் ஆசாபாசங்களும் காமக்குரோதாதி களும் நம்முடன் கூடவே விருத்தியாய் வந்தன. இவை களை கிரமக் கிரமமாய் யோகசாதனையினாலும் ஆத்மவிசா ரணையினாலும் போக்கடித்துச் சிதாகாச சொரூபமாகிய, ததாகார விருத்தியில் நிற்பதே முக்தியடைவ தென்பதாம்.

பரமேசுவரன் ஜீவர்களின்மீது கருணையுடையவராய்த் தான் உசுவாசித்த (சுவாசத்தை வெளிவிட்ட) போது வேதங்களையுண்டாக்கி அதன் வழியாய் ஜீவர்கள் சித்த

சுத்தி அடைந்து முக்திபெருமாறு, அவ்வேதங்களைக் கர்ம காண்ட ஞானகாண்டங்களாகப் பிரித்துத் தான் சகுண ரூபமாய் நின்று சங்கு, சக்கரம், கதை, கர்ய திருமேனி முதலியனதரித்து விஷ்ணு மூர்த்தியாகியும், சூலம், டமருகம், விருஷபவாகனம் தவளமேனி (வெண்மைதேகம்) முதலியன தரித்து மஹாதேவராகியும் நின்று வைகுண்ட கைலாஸங்களில் பிரவேசித்து அநுக்கிரகித்தார்கள்; ஆயினும், ஜீவர்களுக்குத் தத்துவஞான நிஷ்டை யுண்டாக வில்லை. ஆதலால், விஷ்ணு வானவர் வியாஸ பகவானுக அவதரித்து அவ்வேதவேதாந்த சாராமிருதங்களைத் திரட்டி, சரத்தில் முத்துக்களைக் கோத்ததுபோல் 'பிரம்ம சூத்திரங்களை ஏற்படுத்தினுர். இதற்கும் உண்மைப் பொருள் விளங்காமையால் பற்பல மதஸ்தர்களும் அவரவர் கொள்கையின் கருத்திற்கேற்றபடி பற்பல வியாக்கியானங்களைச் செய்து கொண்டார்கள். அதனுல், ஸ்ரீ 'சம்பு' வானவர், உண்மைக் கருத்தை ஜீவர்களுக் குணர்த்தவேண்டி ஸ்ரீ சங்கரா சார்யாாக அவதரித்து, இந்த பிரம்ம சூத்திரத்திற்குப் பத விபாகஞ் செய்து யதார்த்த அர்த்தத்தை தெரிவிக்கும் சாரீரபாஷ்யத்தையும் உண்டாக்கினுர். அஃதும் சாமான்யர்கட்கு அர்த்தமாக வில்லையென்று இதர கிரந்தங்களையும் உண்டாக்கினுர். ஆயினும், அவையனைத்தும் ஸமஸ்கிருத பாஷையிலிருப்பதனுல் அந்த பாஷா ஞானமுள்ளோர்க்கே யன்றி ஏனையோர்க்கும் உபயோகமாகாததனுல் சில பெரியோர்கள் தேசபாஷைகளில் அநேக அத்வைத கிரந்தங்களை பாடல் களாய்ப் பாடினர்கள். அவைகளைப் படித்து அநுபவம் பெறுதற்கு சாத்தியமாகாதவர்களுக்காக இப்பொழுது இயற்றியுள்ள இந்த "ஜீவப் பிரம்மைக்கிய வேதாந்த

ரஹஸ்ய'' மானது, மிகவும் சுலபமாய் சிரவண, மநந, நிதித்தியாசனங்கள் மூலமாய், சிறுவர் சிறுமியர்களும் ஆத்மாநுபவத்தைத் தெளிவாய்த்தெரிந்து கொள்ளும்படி, காதலாமலகம் (உள்ளங்கை நெல்லிக்கனி) போல் சுருதி ஸ்மிருதி பிரமாணங்களுடன் அதிக சுலபமான நடையில், தமிழிலும் இங்கிலீஷிலும் வசனரூபமாய் செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கிரந்தத்தை வாசிப்பதனுல் பிரம்மம் தானென்று அறிந்து ஆனந்திப்பதற்கு இது ஒவ்வொருவருக்கும் விசேஷ முக்கியமானது.

உலகத்தின் கண்ணுள்ள ஒவ்வொருவரும் ஞானத்தை அடையவேண்டுமென்று ஆவல்கொண்டிருந்தபோதிலும் அவ்வவர்களினுடைய பூர்வஜன்மங்களின் கர்மமானது, ஞான மார்க்கத்திற்குரிய அரியநூல்களை வாசிக்கவிடாமல், நாவல் (கதை)கள், வீண் சரித்திரங்கள், அருவருக்கத்தக்க நாடகங்கள் அகடவிகடமான குயுக்தி கதைகள் முதலியவற்றை வாசிக்கச் செய்து, அஞ்ஞானமென்னும் படுகுழியில் வீழ்த்தி மாயா சம்சார சமுத்திரத்தில் அலைந்து கொண்டிருக்கச் செய்யும். ஆதலால், பூர்வ சுத்தவாசனையில்லாதவர்கள் இந்த ஜன்மத்திலாகிலும் நல்லொழுக்கத்துடன் பெரியோர்களை யடுத்து, அவர்கள் மனம் சந்தோஷிக்கும்படி நடந்து, அவர்களால் ஞானோபதேசம் செய்யப்பெற்று அதை இடைவிடாமல் அப்யசித்துவந்தால், அந்த அப்யாச முதிர்ச்சியினுல் ஜன்மாந்தரங்களிலாயினும் மோக்ஷத்தை அடைவதற்கு முக்கியமானதாயிருக்கும். உள்ளபடிக்கே ஞானமார்க்கத்தின் உண்மையைச் சிறிதேனும் உணர்ந்தவர்கள் மேற்படி நாவல் முதலிய வீண் கதைகளைப் படித்து தமது வாளுட்களை வீளுட்களாக்கிவிடார்கள்.

ஒருவன் தன் சரீரத்திலிருக்கும் வியாதியைப் போக்கடித்துக்கொள்வதற்கு வைத்தியனும் ஔஷதமும் எப்படி வேண்டுமோ அதுபோல் தனது மனதிலிருக்கும் ஆசையென்னும் அழுக்குகளைப் போக்கடித்துக் கொள்வதற்கு குருவென்னும் வைத்தியனும் யோகாமிருதமென்னும் ஔஷதமும் அத்தியாவசியமாய் வேண்டற்பாலன.

ஸம்ஸார நிவர்த்தியானது, ஞானத்தினுல் உண்டாகுமேயன்றிக் கர்மத்தினுல் உண்டாகமாட்டா. பூர்வஜன்ம புண்ணிய கர்மங்களினுல் பரிபக்குவமடைந்து சம்சாரத்திலிருந்து விரக்தி அடைந்தவனே ஞானத்திற் கதிகாரி; அவனே மோக்ஷமடைய அர்ஹன். மோக்ஷமே பந்த விமுக்திபாகிய பிரம்ம ஞான சொரூபம் எனவும், அஞ்ஞானமே பந்தத்திற்குக் காரணமெனவும் விசாரித்துத் தெளிதலே மானுடயாக்கை யெடுத்ததனுலான பயன். ஆகவே, ஒவ்வொருவரும் ஸத்குருமுகமாய்ச் சாஸ்திரங்களை ஆராய்ச்சிசெய்து அவரால் உபதேசம் பெற்று அவ்வழியேயநுஷ்டித்து வந்தால் மேலெடுக்கும் ஜன்மங்களில் சகல ஆசைகளும் விட்டு நீங்கும்.

ஐயா ! ஸத்குருவினுல் தெரிந்துகொள்ளத்தக்க உபதேசங்கள் எல்லாம் இதில் உபதேசித்திருக்கின்றதென்றும், மோக்ஷமடைய அதிதீவிர பக்குவ முடையவர்களுக்கு இதுவே முக்கிய நூலாயிருக்கின்ற தென்றும், இந்நூல் வாசித்த அனேக புண்ணிய புருஷர்கள், மோக்ஷப்பிராப்தி அடைவார்களென்றும், அவர்கள் அடைந்த மோக்ஷபதவியில் தமக்கும் கிஞ்சித்மாத்திரம் லபிக்கவேண்டுமென்றும், அப்படி லபித்த புண்ணியத்தினுல் தாம் கடைத்தேற வேண்டுமென்றும் உத்தேசம் கொண்டு, கோயம்புத்தூர் ஜில்லா அவநாசி தாலூக்காவைச்சார்ந்த தேக்கம்பட்டி

கிராமத்திலிருக்கும் தேசியகவுண்டர் பார்யை சௌபாக்கிய வதி பொம்மம்மாள் இந்நூல் அச்சிடுவதற்காக ரூபா 500 ஈசுவரார்ப்பணமாய்க் கொடுத்திருக்கின்றார்கள்.

இந்தப் புண்யவதி உத்தேசம்கொண்டிருப்பது எப்படி இருக்கின்றதென்றால்; ஆலயத்திற்குள் பிரவேசிக்கும் மஹாத்மாக்களினுடையவும், புண்ணியவான்களினுடையவும் பாதங்களினால் மிதியுண்டு, அவர்களின் பாத பரிசத்தினால் தாம் கடைத்தேற வேண்டுமென்று எண்ணி, ஆலயங்களைக் கட்டிவைத்த புண்ணிய புருஷர்கள் எல்லோரும் கோபுர வாசற்படிகளிலும் மூலஸ்தானங்களிலுள்ள பித்தளைப்படிகளிலும் சுற்றிலுமுள்ள பிராகாரங்களிலும் ஆங்காங்கு பெரியோர்கள் செல்லும் மார்க்கங்களிலெல்லாம் தம்மைப்போன்ற உருவங்கள் கல்லிலும் பித்தளைபடிகளிலும் அடிப்பித்து வைத்திருக்கின்றார்கள். இப்படி வைப்பதற்குக் காரணம் யாதெனில், ஆலயற்திற்குள் பிரவேசிக்கும் மஹாத்மாக்களின் பாத ஸ்பரிசம் பட்டாகிலும் நமது ஜனனம் கடைத்தேற வேண்டுமென்னும் உத்தேசங்கொண்டு ஆங்காங்கு தம்மைப்போன்ற சிலைகளை அடித்து வைத்திருப்பது எல்லோரும் அறிந்த விஷயமே.

இவ்விடம் அப்படிப்பட்ட சந்தர்பங்கள் நேரிடாவிட்டாலும் மேற்படி பொம்மம்மாள் திரவ்விய சகாயத்தினால் வாங்கிய கடிதங்களில் பதிப்பித்திருக்கும் வேதவாக்கியங்களை மஹாத்மாக்களின் வாக்கினால் உச்சரித்த மாத்திரத்தில் தமக்கு புண்ணியபலன் உண்டாகுமென்றும், மற்றும் சிலர் இந்நூலில் உபதேசித்திருக்கும் ‘குரு’ ரகஸ்யங்களை எல்லாம் அறிந்து அப்பியாசம்செய்து வரப்பட்டவர்களுக்கு, மனோலயமாய் பிரம்மாநந்தத்தில் சொக்கியிருக்கும் ஆநந்தம், தமக்கும் கிடைக்கவேண்டுமென்று எண்ணி இவ்வித

தர்ம கைங்கர்யத்திற்குப் பொருள் செலவு செய்ததாய் ஸ்பஷ்டமாய்த் தெரியவருகின்றது. நற்குணமுடைய புண்ணிய புருஷர்களின் உள்ளம் எப்பொழுதும் இப்படிப்பட்ட ஸத்கர்மங்களிலேயே தமது திரவ்யத்தை செலவழிக்க இச்சைகொண்டிருப்பார்களென்று அறியக் கடவீர்களாக.

ஓ சகோதரிகளே! ஓ சகோதரர்களே! பாலும் நீரும் கலந்து பிரிக்கக்கூடாத நிலையில் இருக்கையில், அன்னப்பக்ஷியானது நீரினின்று பாலைப்பிரித்து நீரை நீக்கிப் பாலை மாத்திரம் உட்கொள்ளுகின்றது. இதைச்செய்ய இதர பக்ஷிகளால் முடியாது. அதுபோலவே, இந்நூலைவாசிக்கும் சகோதரிகளும் சகோதரர்களும் முன்சொல்லிய அன்னபக்ஷியைப்போல், இந்நூலில் எழுதியிருக்கும் ஸத்விஷயங்களைக்கொண்டு குற்றங்களை நிவர்த்தி செய்வீர்களென்று பிரார்த்திக்கின்றனன்.

இங்ஙனம்,

உங்கள் எல்லோருடைய க்ஷேமத்தைக் கோரப்பட்டவன்,

பரமஹம்ஸ ஸச்சிதாநந்தன்,

கடப்பை.

ஸ்ரீ சற்குரு பாதந்துணை.

ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரகஸ்யம்

# சிறப்புப்பாயிரம்.

இது

ஸ்ரீ ஷண்முகாநந்தர் மரபில்வந்த

**சதாநந்த ஸரஸ்வதி**

இயற்றியது.

நேரிசை யாசிரியப்பா.

உலகமெலாம் போற்று மொருதனிப் பாஞ்சுடர்
அருளிய வாரணம் பிரம சூத்திரமுங்
கண்ணனெம் பெருமான் கனிந்த கீதையும்
அவன்பதம் பராவிய வனந்தமா முனிவார்
வேத பாரகர் வித்தகச் செல்வரும்
பாதஞ் சலமுநி பகர்ந்தநூன் முறையும்
யோக சிகோப நிடதக் குண்டலி
யோக தத்துவம் யோக சூடாமணி
ஆத்ம போதம் யாஞ்ஞ வல்கியம்
சர்வ சாரந் தக்ஷிணா மூர்த்தம்
ஏகா க்ஷரத்தோ டிசைந்த சந்யாசம்
ஓதிய வுபநிடத் தாதிய முயர்நூல்
ஆங்காங் கமைதரு மரும்பொரு ளாய்ந்து
ஈங்குளம் வியப்ப வின்சுவை யிஃதெனஅ
முத்தமிழ்க் கவிஞர் சித்தங் களிப்புற
எளிதினி லியாவரு மின்பமீ டெய்தும்
யோக சாதனத் துயர்பொரு ளோர்ந்தே
தன்னனு பவத்தைத் தாரணி யுவப்பப்
பொருளல்ல வற்றைப் பொருளென மருளும்

பொய்திக மூலக முப்வகை முறையே
பொருளி னரும்பொருள் புகன்றனன் புண்ணியன்
அன்னவன் யாரெனி லரைகுதுங் கேண்மின்
கிஞ்சுக மஞ்ஞையுங் கிளர்பூங் காவினங்
கொஞ்சு மாவளர் கோகிலங் குலவு
மதுமலர்ச் சோலைபு மாதவிச் சாலையும்
அன்னங் கண்படு மகவிதழ்க் கமலம்
உன்னருந் தண்பணை யோங்கு மொருதனி
நீர்வள நிலவள நெல்வள நிலவிய
சீர்வளம் பொருந்துந் தேடரு மளவில்
அலகில் புகழ்பெறு உ மாடவர் மங்கையர்
இலகு மெழில்பட ரின்னிசை மன்னிய
பொன்னி னனையர் பொருந்து பூம்பதி
உருப்படு முத்தம ருயர்நலங் கிளர்ந்த
திருப்பனங் காடேனுந் திருப்பதிச் செல்வன்
ஆடகம் வேய்ந்த கூட லம்பதி
சுந்தரன் சோம சுந்தரன் தூய்பதம்
சந்ததம் பரவுஞ் சிந்தைய னுவந்த
சுந்தரன் சோம சுந்தர வள்ளல்
மாட்சி வளர்விசா லாட்சிமுற் பவத்தில்
பழுத்த மனத்தே வழுத்திய தவமெலாம்
ஒருங்கே குழீஇ யொருமக வாகித்
திருந்திய திருவிற் றிருக்குலந் தழைக்கும்
அருந்தவ மியற்ற வாரிய னமர்ந்துளன்
பவக்கடல் கடக்கும் பற்பல துறையே
தவத்திறம் பூண்ட தனியோ குடையரும்
மறைமறை பயின்ற மாதவரோதிய
முறைமுறை தேர்ந்த மூதறி வாளன்

குறைவில் சீர்த்தியன் குணப்பெருங் குன்றம்
அன்பருள் வாய்மை யடக்கம ளவில்சீர்
தன்பொரு ளாமெனத் தம்முளம் வளர்த்தோன்
மாரக மிருதரு மாமறைப் பொருளாம்
தாரக நாமத் தனிமுத லிராமன்
தாரகச் சரிதையின் தத்துவ முணர்த்தினன்
முற்று மாய்ந்துணர் தத்துவ னுத்தமன்
வெற்ற வெளியில் விளங்குநன் மாபினன்
முத்தி சாதனத் துத்தம் பாகத்
தெத்தகை ஞருமிஃ தெளிதி னுணர்வதாம்
இத்தகை நூலிங் கியற்றி யளித்தனன்
நன்னயம் பெருகும் பெண்ணையாற் றருகின்
களிமது குடையுங் காவுஞ் சோலையும்
அளிமலர் நந்தன மனந்தம் வளந்தரும்
மாட மாளிகை மதிதவழ் கோபுரச்
சிகர மோங்கித் திருமக டிகழ்தருங்
கடப்பையம் பதியின் கருதருந் தவத்தினன்
அருளொரு படிவத் தமர்ந்த வாரியன்
நித்தியா னந்த நிமலர்க் கினியவன்
ஜீவப் ப்ரஹ்மைக்ய வேதாந்த ரகசியம்
தாவிலி யோகந் தழைக்கத் தந்ததில்
நிலைநிலை யாமை நிகழ்த்தினன் வெளியாய்
அலையு மனத்தை யகத்தி லடக்கிடும்
பூரக ரேசகம் பொருந்துங் கும்பகம்
பயிலும் பான்மையும் பாங்குறும் பத்தியம்
ஆதியா யனைத்து மநுபவித் தறைந்தனன்
உச்சிமேற் புலவ ருவக்கும்
ஸச்சிதா நந்தத் தபோதனன் மாதோ.

## சாற்றுகவி.

இது
நீலகிரி உதகமண்டலம் திருக்காந்தல்
ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி கரர் ஆலயம்,
ஓம் அசலபீட உலகோபகார வித்யாதன சபை
**ஸ்ரீ ஓம் ப்ரகாச ஸ்வாமிகள்**
இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சீர்கொண்ட மதிகண்ட பெரியர்வாழ் கடப்பையாந்தேசம்வந்தோர்
நீர்கொண்ட புவியாளர் நலமோட்சமின்னதென நேர்ந்துகொள்ளப்
பேர்கொண்டபிரபலசாஸ்திரம்ஜீவப்பிரஹ்மைக்யப் பெட்பு நூலைத்
தார்கொண்ட பரமாம்ஸ ஸச்சிதாநந்நன் தமிழிற் சாற்றினனே.

பெங்களூர், சூளை
ஸத்குஹாச்ரம
**ஸ்ரீ ப்ரஹ்ம வித்யாதன சபை**
ஸ்தாபகர்
ஓம் அசலபீடம் நிஸ்சல ப்ரகாஸரென்னும்
**ச. மு. நாராயண சுவாமிகள்.**

**அபிப்ராயம்.**

ஸர்வாதிஷ்டான ப்ரத்யக் ப்ரஹ்ம ஸத்தையே ஸ்வ பாவ ஸத்தெனக் கூறி, நிரம்பவும் விசாலமான கொடுமுடியாய் விளங்கும் வேதோப நிஷத்தின் பிரமாணங்களை, அதிக சூக்ஷ்ம புத்தியுடையோர்களுக்கே யல்லாது மற்றும் ஏனை யோர்களும் அறியும்படி ஆசார்ய பிரஸாதம்போல்வதான "ஜீவப் ப்ரஹ்மைக்ய வேதாந்த ரஹஸ்யம்" என்னும் இந்த கிரந்தமானது. கடப்பை ஸ்ரீ மத் பரம ஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வர ரவர்களால் தமிழில் சுலோகமும், அழகிய வியாக்கியானத்துடன் எழுதி வெளிவந்துள்ளது. வேதாந்த விசாரணைசெய்ய முற்படும் ஒவ்வொருவரும் இதனை ஆசிரயித்து ஆநந்த முறுவார்களாக.

# ஸ்ரீ ஸற்குரு ஸ்துதி.

ஆநந்தமாநந்தகரம் ப்ரஸந்நம்
ஞாநஸ்வரூபம் நிஜபோத யுக்தம்
யோகீந்த்ரமீட்யம் பவரோக வைத்யம்
ஸ்ரீ மத்குருந் நித்யமஹம் நமாமி.

ஸந்தோஷத்தை உண்டாக்கும் அனுக்ரஹமுடைய ஆநந்த ஸ்வரூபனும், தான் தானாயிருந்து யோகீஸ்வரர்களால் துதிக்கப்பட்டு, ஸம்ஸாரமென்னும் வியாதிக்கு வைத்தியனா யிருக்கும், குருவாகிய உனக்கு, இருகைகளையும் குவித்து நமஸ்கரிக்கின்றேன்.

நமோஸ்து குருவேதஸ்மை
இஷ்டதேவ ஸ்வரூபிணே
யஸ்யவாக்யாம் ருதம்ஹந்தி
விஷம் ஸம்ஸார ஸங்கிகம்.

எவரது அம்ருத வாக்கினால், ஸம்ஸாரமென்னும் பெயரையுடைய விஷத்தை போக்கடிக்கின்றதோ, அப்படிப்பட்ட ஸற்குருவை நமஸ்கரிக்கின்றேன்.

நமஸ்தே ஸதேதே ஜகத்காரணாய
நமஸ்தேசிதே ஸர்வலோகாஶ்ரயாய
நமோத்வைத தத்வாயா முக்திப் ப்ரதாய
நமோ ப்ரஹ்மணே வ்யாபிநே ஶாஶ்வதாய.

சுயம்பிரகாசனும், ஜகத்திற்கெல்லாம் கர்த்தனும், ஞான ஸ்வரூபனும், ஸகல உலகத்தையும் காப்பாற்றப்பட்டவனும், அத்விதீயனும், மோக்ஷத்தைக் கொடுக்கப்பட்ட

வனும், எல்லாவற்றிலும் நிறைந்திருக்கப்பட்டவனும், நித்ய பிரம்மமா யிருக்கும் உன்னை நமஸ்கரிக்கின்றேன்.

வயம்த்வாம் ஸ்மராமோ வயம்த்வாம் பஜாமோ
வயம்த்வாம் ஜகத்ஸாக்ஷிரூபம் நமாமஃ
ஸதேகம் நிதாநம் நிராலம்பமீஶம்
பவாம்போதி போதம் ஶரண்யம் வ்ராஜாமஃ.

நாங்கள் உன்னை துதிக்கின்றோம், நாங்கள் உன்னை பஜனை செய்கின்றோம், ஜகத்திற்கெல்லாம் சாக்ஷிபூதனு யிருக்கும் உன்னை நமஸ்கரிக்கின்றோம், நீ ஸத்ய சொரூபன். ஆதிமூலன், ஆதாரமில்லாத வெட்ட வெளியைப்போல் இருப்பவன், நீயே பிரபுவு, ஸம்ஸாரமென்னும் சமுத்திரத்திற்குப் படவைப்போல் இருக்கப்பட்டவன் நீயே. இப்படிப்பட்ட உன்னை ஒருவனையே நான் நமஸ்கரிக்கின்றேன்.

த்வமேவ மாதா ச பிதா த்வமேவ
த்வமேவ பந்துஶ்ச ஸகா த்வமேவ
த்வமேவ வித்யா த்ரவிணம்த்வமேவ
த்வமேவ ஸர்வம் மமதேவதேவ.

எனக்கு தாயும் தந்தையும் நீயே, சினேகிதனும் பந்துவும் வித்தையும் தானமும் நீயே, தைவமும் நீயே, எல்லாம் நீயே ஆதலால் உன்னையே நம்பி நமஸ்கரிக்கின்றேன்.

# ஸ்ரீ பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீஸ்வரர், கடப்பை.



20-வது வயதில் பிடித்த போடோ.



25-வது வயதில் பிடித்த போடோ.



சுவாமிகளின் பத்நியார்.



சென்னைவியாசர்பாடியில்பிடித்தபோடோ.

மேற்படி சுவாமிகளின்பத்நியார் 39-வயதில் பிடித்த போடோ. இவ்வம்மையார் ஜனனம் வெள்ளிக்கிழமை, ருதுவானது வெள்ளிக்கிழமை,

விவாகம் முடிந்தது வெள்ளிக்கிழமை, நிஷேக முகூர்த்தம் செய்தது வெள்ளிக்கிழமை, சிவபதவியடைந்ததும் வெள் ளிக்கிழமையேயாம். இவ்வம்மைக்கு ஸந்தானம் இல்லை. இவ்வம்மையாரை இந்நூலில் காட்டுவதற்குக் காரணம் யாதெனில், இந்நூலாசிரியராகிய மேற்படி சுவாமிகள் இவ் வம்மையாருடன் கூடி இஹலோக சுகம் அனுபவித்துக் கொண்டே பிராணாயாமாப்பியாசம் செய்துகொண்டு வந் தார். ஆதலால், உலகத்திலுள்ள யாவரும் சம்சாரத்துடன் இருந்து யோகாப்பியாசம் செய்ய இவ்வம்மையாரை இங்கு திருஷ்டாந்தமாய்க் காட்ட நேர்ந்தது. இவர் பூர்வாசிர மத்தில் செய்துவந்த வியாபாரத்தில் மாதம் ரூபாய் நானூறுக்குமேல் லாபம் வந்துகொண்டிருந்தது. பிறகு யோகாப்பியாசம் அதிகரித்துக்கொண்டேவரவர அந்த யோகபலத்தினால் இருந்தாற்போலிருந்து சகல விஷயங் களிலும் விரக்தியுண்டாய் சகலமும் விட்டு ஒழித்து எவ் விடமாகிலும் சென்றுவிடுவது வழக்கம். அப்போது இவ்வம்மையார் மேற்படி சுவாமிகளைத்தேடிக் கண்டு பிடித்து அழைத்துவந்து தன் வீட்டுப்பக்கத்தில் ஓர் ஏகாந்த அரையில் வைத்துக் கார்துவந்து தாம் இவருடன் கூடி அனுபவித்த சுகங்களெல்லாம் ஒழிந்ததேயென்று மிகவும் மனம்நொந்து அந்த மனோ வியாகூலத்தினால் வியாதியுண்டாய் பிராணனை விடும்சமயத்தில், தாம் பிரதி வெள்ளிக்கிழமை, தவறாமல் விரதத்துடனிருந்து செய்து வந்த ரோஜாபுஷ்ப வர்ணமுடைய கிருஷ்ண விக்கிரஹ படத்தைக் கொண்டுவரச்சொல்லி சயனித்தபடியே அதை தம் இரு காத்தால் வாங்கி, படத்தை முத்தமிட்டு கர்ப்பூரம் ஏற்றும்படிச்சொல்லி கிருஷ்ணா! எனக்கு வெண்ணை கொடுக்கின்றாயா? பால் கொடுக்கின்றாயா? தயிர் கொடுக்

கின்றுயா? என்று சொல்லி படத்தின் உருவத்தைப் பார்த்துக்கொண்டே பிராணனை விட்டுவிட்டார்கள். பிராணனை இவ்வாறு விட்டுவிட்டபடியால் இவ்வம்மையார் மிகவும் நல்ல கதியையே அடைந்திருக்கலாம். பிறகு அவ்வம்மையார் பந்துக்கள் யாவரும் மேல்விழுந்து பெருங்தொனி செய்து ஓ! வென்று கூச்சலிட்டு கதறி அழுதார்கள். ஆதலால், உங்கள் குடும்பத்தில் யாவரேனும் பிழைக்க மாட்டார்கள் என்று தெரிந்தால் அவர்கள் பிராணனை விடுவதற்குமுன் ஒரு சுமை தர்ப்பையை அறுத்து வந்து தயார் செய்து வைக்கவேண்டும். பிறகு பிராணனை விடும் சமயத்தில் பூமியை பசுஞ்சாணத்தினுல் மெழுகி அதன்மேல் சிரசுமுதல் பாதம் வரையில் இருக்கும்படி தர்ப்பையை விசேஷமாய்ப் பரப்பி அதன்மேல் வெள்ளை வஸ்திரம் நீளமாய் விரித்து பிராணன் விடப்பட்டவர்களை தர்பாசனத்தின்மீது எடுத்து சயனிக்கச்செய்து பந்து ஜனங்களை அவர்களின் சமீபமாய்ச் சேரவிடாமல்செய்து ஏதாகிலும் ஓர்கடவுளின் படத்தின் ரூபத்தை அவர்களின் பார்வைக்கு நேராய் காட்டிக்கொண்டிருந்தால் அவர்களின் மனம், கண் இந்திரியமூலமாய் அது இன்ன படமென்று அறிந்து அதன்பெயரை நினைத்துக்கொண்டே பிராணனை விடுவார்கள். அப்படி விடுவதனுல் அவர்கள் மேலான பதவியை அடைவார்கள். இப்படிக்குச் செய்யாமல் பந்துக்களை அவர்களின் ஸமீபமாய் நெருங்கச்செய்தால் அப்போது இறக்கப்பட்டவர்களின் மனம், சம்சார பந்தத்தில் ஆழ்ந்து நிற்கும்; அதனுல் அவர்கள் மறு ஜன்மத்தில் சம்சாரதுக்கத்தையே அதிகமாய் அனுபவிக்க வேண்டியதாய் நேரிடும். ஆதலால், இதை வாசிக்கப்பட்டவர்களின் வீட்டில் எவர்களாகிலும் மரணமடைவதாயிருங்

தால் அச்சமயத்தில் முன் சொல்லியதுபோல்செய்ய, தர்ப்பை வெள்ளைவேஷ்டி முதலானவைகளைத் தயார்செய்து வைத்து அதிக ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். தர்பை மிகவும் பவித்ரமானதாதலால் அதன்மேல் பிராணனை விடுவது மிகவும் சிரேஷ்டமானது. பூர்வஜன்ம புண்ணியமுடையவர்களுக்கே தர்பையின்மீது பிராணனை விடுவது லபிக்குமேயொழிய மற்றவர்களுக்கு லபிக்கமாட்டா.

தர்ப்பை பவித்ரமானது என்பதற்கு மஹாபாரதமே திருஷ்டாந்தமாயிருக்கின்றது. அதை இங்கு சொல்லுகின்றோம் கேளுங்கள்:—கஸ்யப ப்ராஜாபதி என்பவருக்கு கத்ருவை என்றும், விநுத என்றும் இரண்டு மனைவிகள் இருந்தார்கள்.

இவர்கள் இருவருக்கும் புத்ர ஸந்தானமில்லாமலிருந்தபடியால் தம் நாயகராகிய கஸ்யப ப்ராஜாபதி என்பவரை மனதில் நினைத்து அநேக ஆயிர வருஷங்கள் தவம்செய்தார்கள்; அப்போது கஸ்யப ப்ராஜாபதி அவர்களுக்குப் பிரத்தியக்ஷமாய், நீங்கள் எதற்காக என்னைக் குறித்துத் தவம்செய்தீர்களோ அதைக் கேட்பீராகில் அதுபோல் அளிக்கின்றோம் என்று சொல்லினர். அதற்கு கத்ருவையும், விநுதையும் மிகவும் சந்தோஷித்து சுவாமீ! மிகவும் காந்தியுடைய தேகமும் தீர்க்காயுசும் இருக்கும்படியாய், ஆயிரம் புத்திரர்களை பெற வரம் தரவேண்டுமென்று கத்ருவை என்னும் அம்மையார் கேட்டனள். பிறகு விநுதை யென்னும் அம்மையார் கத்ருவை கேட்டவரங்களைவிட இன்னும் அதிக பலமுடைய இரண்டு குமாரர்களைப்பெற வரமளிக்கவேண்டுமென்று கேட்டனள். கஸ்யப ப்ராஜாபதி என்பவர் பூர்வம் புத்ரகாமேஷ்டியாகம் செய்தவராதலால் அவர்கள் கோரியது

போல் வரம்தந்து அவர்களின் ருதுகாலங்களில் கூடி கத்ரு வைக்கு ஆயிரம் முட்டைகள் உண்டாகு மென்றும் அவை களை புதுபாண்டங்களில் வைத்து மூடி காப்பாற்றி வந்தால், ஐநூறு வருஷத்தில் முட்டையிலிருந்து ஆதிசேஷன், கார்கோடகன், தனஞ்சயன், காளிநாகன், மணிநாகன் என்று இவ்வாறு அனேகபெயர்களை யுடையவர்கள் ஆயி ரம் ஸர்ப்பங்கள் உண்டாகுமென்றும், வினுதை யென்னும் அம்மையாருக்கு உண்டாகும் இரண்டு முட்டைகளையும் ஆயிர வருஷம் புதுபாண்டத்தில் வைத்து மூடிக் காப் பாற்றி வரவேண்டு மென்று சொல்லிச்சென்றார். அவர் சென்றபிறகு அனேக நாட்களுக்குப்பின் கத்ருவைக்கு ஆயிரம் முட்டைகளும் வினுதைக்கு இரண்டு முட்டை களும் உண்டாயின. அவர்கள் அதை புதுபாண்டத்தில் வைத்து மிகவும் ஜாக்கிரதையாய்க் காப்பாற்றி வந்தார் கள். ஐநூறு வருஷங்களுக்குப்பின் கத்ருவையின் ஆயிரம் முட்டைகளிலிருந்து ஆதிசேஷன், கார்கோடகன் முதலாகிய ஆயிரம் ஸர்ப்பங்கள் உண்டாயின. இதை வினுதை கண்டு மனம் தாளாமல் சில நாள் சென்றபிறகு ஓர் முட்டையை யெடுத்து உடைத்துப்பார்த்தனள்; அப்போது முட்டைக்குள் பாதிகைகளும் கால்களும் பாதிசரீரமுடைய ரூபத்தைப்பார்த்தாள். முட்டைக்குள் ளிருக்கும் சிறுவன் தான் சரியான அங்கங்களுடன் கூடிப் பிறவாததனால் தாயின்மேல் கோபித்து என் அவயவங்கள் பூர்த்தியாகாமுன்னமே முட்டையை உடைத்தபடியால் நீ உன் தமக்கைக்கு ஐநூறு வருஷம் தாதிவேலை செய்யக் கடவாய் யென்று சாபமிட்டு, தாயே! மற்றொரு முட் டையை இன்னும் ஐநூறு வருஷங்கள் வரையில் வைத்து தானாய் வெளிவரும்வரையில் காப்பாற்றவேண்டும்; அப்

போது அதிலிருந்து மிகவும் பல பராக்கிரமசாலியாயும் ஸத்யவானும் பிறந்து உன் அடிமையை நீக்குவான் என்றுசொல்லி, தான் சூர்யனுக்கு ரதசாரதியாய்ச் சென்றான். பிறகு ஒருநாள் தங்கை தமக்கை இருவரும் சமுத்திரக்கரை ஓரமாய்ச் சென்றபோது அங்கு மேய்ந்துக் கொண்டிருக்கும் மிகவும் வெண்மையான குதிரையை கத்ருவை பார்த்து தங்கையைக் கூப்பிட்டு அடீ தங்கையே இதோ, மேய்ந்து கொண்டிருக்கும் மிகவும் வெண்மையுடைய குதிரையின்வாலில் கறுப்புமயிர் இருப்பதைப்பார் என்று சொல்லினள். விநுதை வால் மயிர் வெண்மையாயிருப்பதைக்கண்டு நகைத்து அடீ அக்கா நீ எந்தக்கண்ணால் பார்த்தாயோ தெரியவில்லை. வால்மயிரில் கறுப்பு எங்கேயிருக்கின்றது இல்லையேயென்றுசொல்லினள். அதற்கு கத்ருவையானவள் சொல்லுகின்றாள், அடீ தங்கையே அந்தக்குதிரையின் வால் மயிர் கருப்பாய் இல்லாவிட்டால் உனக்கு நான் அடிமைவேலை செய்கின்றேன். வால் மயிர் கருப்பாயிருந்தால் நீ எனக்கு அடிமைவேலை செய்யவேண்டுமென்று சொல்லினள். அதற்கு தங்கை சம்மதித்து குதிரையின் சமீபமாய்ப் போய்ப் பார்க்கலாம் வா என்று அழைத்தனள். அதற்கு கத்ருவை சொல்லுகின்றாள் இப்பொழுது பொழுது போயிற்று நாளைய காலையில் வந்துபார்க்கலாம் வாவென்று அரண்மனைக்கு அழைத்துச்சென்றாள். அன்றுராத்திரி தன் குமாரர்களைவரவழைத்து அப்பா! குமாரர்களே இப்போது நான் ஒன்று சொல்லப்போகின்றேன் அது போல்செய்து என் அடிமையை நீக்கி என்னைக் காப்பாற்ற வேண்டுமென்று கத்ருவை கேட்டுக்கொண்டு பின்வருமாறு சொல்லுகின்றாள். குமாரர்களே உங்கள் சிறியதாயாராகிய

வினுதையும் நானும் சமுத்திரக்கரையோரமாய்க் நேற்று மாலை சென்றபோது அங்கு மேய்ந்துகொண்டிருந்த வெண்மை நிறமுடைய குதிரையை யான்பார்த்து அதின் வால் கறுப்பாயிருக்கின்றது என்று சொன்னேன். அதற்கு அவள் கறுப்பல்ல வெண்மையே என்று சொல்லினள். வால் வெண்மையாயிருந்தால் நான் உனக்கு அடிமைவேலை செய்கின்றேனென்றும் வால் கறுப்பாயிருந்தால் நீ எனக்கு அடிமைவேலை செய்யவேண்டுமென்றும் பந்தயம் போட்டுக் கொண்டோம். ஆதலால் நீங்கள் நாளை காலைக்குள் அக் குதிரையின் வாலை கறுப்பாய்ச் செய்யவேண்டும். நீங்கள் அப்படிச்செய்வீர்களாகில் வினுதை எனக்கு அடிமையா வாள் நீங்கள் அப்படிச்செய்யாவிட்டால் நான் வினுதைக்கு அடிமைத்தொழில் செய்யவேண்டுமென்று சொல்லினள்: அதற்குக் குமாரர்கள் யோசித்து தாயின் வாக்கை மீறி நடக்கலாகாதென்பது சாஸ்த்திரப்பிரமாணமா யிருந்த போதிலும் அவளும் தாயல்லவா? ஸ்திரீ ஜாதியை நம் பலாகாதென்று எண்ணி சும்மாயிருந்து விட்டார்கள். தாயானவள் இவர்கள் சும்மாயிருப்பதைக்கண்டு மிகவும் கோபம்கொண்டு என்வார்த்தையைக்கேளாத நீங்கள் இருந்தென்ன போயென்ன இனி, ஜனமேஜயன் செய்யப் போகும் சர்ப்பயாகத்தில் நீங்களெல்லோரும்வீழ்ந்து சாகக் கடவது, என்று சாபமிட்டனள். அந்தசாபத்திற்குக் கார் கோடகன் என்னும் சர்ப்பமானது பயந்து அதிகாலையில் சமுத்திரக்கரையோரம் சென்று அங்கு மேய்ந்துக்கொண் டிருந்த வெள்ளைக் குதிரையின் வால் மயிரில் போய்ச் சேர்ந்து வெண்மையுடைய வால் மயிரையெல்லாம் சுற்றிக்கொண்டு கறுப்பு நிறமுடையதாய்ச் செய்துவிட் டது. மறுநாள் காலை கத்ருவையும் வினுதையும் சமுத்

திரக்கரையோரம்சென்று குதிரையின் வால்மயிர் கறுப்பா யிருப்பதைக்கண்டு தங்கையாகிய வினுதையை அடிமை யாய்ச் செய்துகொண்டாள். மற்ற ஐநூறுவருஷங்கள் சென்றவுடன் வினுதையின் மற்றொரு முட்டையிலிருந்து, மிகவும் அகலமாகிய ரெக்கைகளும் விசேஷபலமுமுடைய கருடபகவான் வெளிவந்து, தாயை நமஸ்கரித்து நின்றிருந் தார். தாயின் சமீபமாய் நின்றிருக்கும் கருடனை கத் ருவை கண்டு கருடன் தேககாந்தியையும் பலத்தையும் பார்த்து பொறாமைக்கொண்டு அடே கருடா நீ இன்று முதல் என் குழந்தைகளையெல்லாம் சுமந்துக்கொண்டு அங் கங்குசென்று வேடிக்கைக் காட்டி வரவேண்டுமென்று சொல்லினள். கருடன் அதுபோல் சம்மதித்து, அவர்களை யெல்லாம் தன் முதுகின்மேல் சுமந்துகொண்டு ஆகாய மார்க்கமாய்க்கிளம்பி, அங்கங்கிருக்கும் விநோதங்களையெல் லாம் காட்டிக்கொண்டேவர ஒருநாள் சூர்யமண்டலம் சமீ பமாய்ச் சுமந்துகொண்டு போகும்சமயத்தில், ஸர்ப்பங் களின் முதுகெல்லாம் தீச்சூடு கொளித்திவிட்டபடியால் சூட்டிற்குத்தாளாமல் ஸர்ப்பங்களெல்லாம் பூமியில் வீழ்ந்து மூர்ச்சையாயின. இது சங்கதி கத்ருவை கேட்டு மிகவும் வருத்தமடைந்து கருடன்மீது கோபித்து விசேஷ மாய்த்தூஷித்து குமாரர்களை பிழைபித்துக்கொள்வதற்காக இந்திரனைவேண்டி மக்களைப் பிழைப்பித்துக்கொண்டாள். பிறகு கருடபகவான், தன்தாயைப்பார்த்து தாயே உனக் கும் எனக்கும் இந்த அடிமைத்தொழில் வருவதற்குக் காரணமென்னவென்று கேட்டது. அதற்குமுன் நடந்த விஷயங்கள் யாவையும் தாயானவள் கருடனுக்குச்சொல்லி னள். கருடன் அதைக்கேட்டு மிகவும் வருத்த மடைந்து ஒரு நாள் சர்ப்பங்களைக் கருடன் பார்த்து, நீங்கள் எங்கள்

அடிமையை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டது. அப்போது ஸர்ப்பங்களெல்லாம் கருடனைப்பார்த்து, அதிக பராக்கிரமமும் பலமும் உலகமெங்கும் பிரசித்தியடைந்த பக்ஷிராஜனே! நீங்கள் உங்கள் அடிமையை நிவர்த்தி செய்து கொள்ளவேண்டுமானால் தேவலோகத்திலுள்ள அமிருதத்தை எங்களுக்குக் கொண்டுவந்து கொடுப்பாயாகில் அடிமையைப் போக்கடிப்போமென்று சற்பங்கள் சொல்லிற்று. அதற்குக் கருடன் சம்மதித்து தேவலோகம் சென்று அனேகயுத்தம்செய்து அமிர்தத்தைக் கொண்டு வரும்போது தேவேந்திரன் தடுத்து நீ யாருக்காக இதைக் கொண்டுபோகின்றாயென்று கேட்டனர். அதற்குக் கருடன் முன் விஷயங்கள் யாவையும் சொன்னவுடன் தேவேந்திரன் கேட்டு, இதை அவர்கள் சாப்பிடாதபடிக்குச் செய்வதற்காக இந்த அமிர்தத்தை தர்ப்பையின்மேல்வைத்து அவர்களுக்குக்காட்டி நீங்கள் ஸ்நானம்செய்து அலங்கரித்து வந்து இதைச் சாப்பிடுங்களென்று சொல்லவேண்டும். அவர்கள் அதுபோல் செய்யப்போனபிறகு நான் அமிருதத்தைக் கொண்டு போய்விடுகின்றேனென்று சொல்லி, இந்திரன் தேவாமிருத மிருக்குமிடத்தில் எவர்களுக்கும் தெரியாமல் மாயமாய் வந்து நின்றிருந்தார். பிறகு கருடன் அமிர்தத்தைக் கொண்டுபோய் ஸர்ப்பங்களுக்கெல்லாம் காட்டி தேவேந்திரன் சொல்லியதுபோல் கருடபகவான் செய்தனர். அப்போது ஸர்ப்பங்களெல்லாம் மிகவும் ஸந்தோஷித்து ஸமுத்திர ஸ்நானம் செய்துவருவதற்குள், தேவேந்திரன் தன்மாயையால் அமிர்தத்தை வேறு கலசத்தில் விட்டுக்கொண்டு வெறும் கலசத்தை தர்ப்பையின்மேல் கவிழ்த்துச்சென்றார். சர்ப்பங்கள்யாவும் வந்துபார்த்து அமிர்தகலசம் கவிழ்ந்துக் கிடப்பதைப்

பார்த்து மிகவும் வருத்தமடைந்து நின்றதுகள். அப்போது தாயானவள் தர்ப்பையின்மேல் சிதறிக்கிடக்கும் அமிர்தத்தை நாக்கினல் நக்கும்படிச் சொல்லினள். சர்ப்பங்களெல்லாம் அதுபோல் செய்தவுடன், தர்ப்பை சர்ப்பங்களின் நாக்குகளையெல்லாம் இரண்டு பிளப்பாய்ப் பிளந்துவிட்டது, அதுமுதல் எல்லா ஸர்ப்பங்களுக்கும் நாக்கு இருபிளப்பாய் இருக்கின்றதென்றும் அமிர்தம் தர்ப்பையின்மேல் வைத்தபடியால் தர்ப்பை பவித்ரமாயிற்றென்றும் மஹாபாரதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட பவித்ரமான தர்ப்பையின்மேல் மரணகாலத்தில் பிராணனை விடவேண்டுமென்று பெரியோர்களால் தெரியவந்ததை இங்கு சுருக்கமாய்ச் சொல்லிமுடித்தோம்.

---

# மானஸபூஜை செய்யவேண்டிய கிரமம்.

நாம் மோக்ஷமடைய பக்தி, தியான, யோக, ஞான மென்று நான்கு படிகளுண்டு. அதில் பக்தி, தியானம் இவைகளைக்குறித்து விவரித்துச் சொல்லுகின்றோம் கேளுங்கள். நாஸ்திகர்கள் தவிர மற்றவர்களெல்லோரும் கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்று நினைக்கின்றார்கள். அக்கடவுளை தரிசித்து சதாகாலமும் மனனம் செய்துவரு வதே பக்தி. ஆதலால், எவரெவர்களுக்கு எந்தெந்த பகவான்மீது பிரீதியோ அந்தந்தப் பகவானை உபாசனை மூர்த்தியாய் (வழிகாட்டும் கடவுளாய்) நினைத்து எந் தெந்தக் கோவில்களுக்குச் செல்லவேண்டுமோ அந்தந்தக் கோவில்களுக்குச் சென்று மூலஸ்தானத்திலிருக்கும் மூல விக்கிரஹம் ஒன்றை மாத்திரம் உச்சிமுதல் பாதப்பெரு விரல் வரையில் அதாவது, சிரசில் அணிந்திருக்கும் கிரீடம் திரிசூர்ணம் அல்லது விபூதி சந்தனம் ஆடையாபரணங்கள் முதலானவைகளையெல்லாம் நன்றாய் திருஷ்டித்துப் பார்த்து அவ்வுருவத்தை இருதயத்தில் நிறுத்தவேண்டும். இவ் வாறு நிறுத்தியபின் வீட்டுக்குச் சென்று சப்தங்கள் கேளாத ஒரு இருட்டு அறையில் வடக்குமுகமாய் பெரிய மணையை அமைத்து அதன்மேல் மான்தோல்போட்டு அத் தோல்மீது அபானவாயு படாவண்ணம் வெள்ளைவஸ்திரம் மடித்துவிரித்து வாசனைவஸ்துக்களை வைத்து கதவைச் சாற்றி தாள்போட்டு முன் அமைத்து வைத்த ஆசனத்தின் மீது வடக்குமுகமாய் பத்மாசனத்திலாவது அல்லது சித் தாசனத்திலாவது உட்கார்ந்து இடுப்பு கூன்வளையாமல் சித்திரப் பதுமைபோல் சின்முத்திரையைப் பிடித்து கண்

கண்மூடி கோவிலில் முன் தரிசித்த மூலவிக்கிரஹத்தை மனதினால் நினைத்தவுடன் அது இருதயத்தில் வந்து நிற்கும். அப்போது அதை உள்ளேயே மனக்கண்ணால் பார்த்து இதனடியில் சொல்லப்போகும் சிவாஷ்டோத்திர ஸதநாமங்களால் அர்ச்சனை செய்து அடியில் சொல்வது போல் அனேக பிரசாத பக்ஷண பழவர்க்கங்களால் வினியோகம் காட்டவேண்டும்.

---

## ஸ்ரீ ஏகாம்பரேஸ்வரர் அஷ்டோத்தர ஸதநாமங்கள்.

ஓம் ஸிவாய நமஃ, ஓம் மஹேஸ்வராய நமஃ, ஓம் ஸம்பவே நமஃ, ஓம் பிநாகிநே நமஃ, ஓம் ஸஸி ஸேகராய நமஃ, ஓம் வாமதேவாய நமஃ, ஓம் விரூபாக்ஷாய நமஃ, ஓம் கபர்திநே நமஃ, ஓம் நீல லோஹிதாய நமஃ, ஓம் ஸங்காராய நமஃ, ஓம் ஸூல பாணயே நமஃ, ஓம் கட்வாங்கிநே நமஃ, ஓம் விஷ்ணு வல்லபாய நமஃ, ஓம் ஸிபிவிஷ்டாய நமஃ, ஓம் அம்பிகாநாதய நமஃ, ஓம் ஸ்ரீகண்டாய நமஃ, ஓம் பக்த வத்ஸலாய நமஃ, ஓம் பவாய நமஃ, ஓம் ஸர்வாய நமஃ, ஓம் த்ரிலோகேஸாய நமஃ, ஓம் ஸிதிகண்டாய நமஃ, ஓம் ஸிவா ப்ரியாய நமஃ, ஓம் உக்ராய நமஃ, ஓம் கபர்திநே நமஃ, ஓம் காமாரியே நமஃ, ஓம் அந்தகாஸூர ஸூத்ராய நமஃ, ஓம் கங்காதராய நமஃ, ஓம் லலாடாக்ஷாய நமஃ, ஓம் கால காலயா நமஃ, ஓம் க்ருபாநிதயே நமஃ, ஓம் பீமாய நமஃ, ஓம் பரஸூஹஸ்தாய நமஃ, ஓம் ம்ருபாணயே நமஃ, ஓம் ஜடாதாராய நமஃ, ஓம் கைலாஸவாஸிநே நமஃ, ஓம் கவ ஸிநே நமஃ, ஓம் கடோராய நமஃ, ஓம் த்ரிபுராந்தகாய நமஃ, ஓம் வ்ருஷாங்காய நமஃ, ஓம் பஸ்மோத்தூளித விக்ரஹாய நமஃ, ஓம் ஸாம ப்ரியாய நமஃ, ஓம் ஸோமராயய நமஃ, ஓம் த்ரயீமூர்த்தயே நமஃ, ஓம் அநீஸ்வராய நமஃ, ஓம் ஸர்வஞ் ஞாய நமஃ, ஓம் பரமாத்மநே நமஃ, ஓம் ஸோமஸூர் யாக்நி லோசநாய நமஃ, ஓம் ஹவிஸே நமஃ, ஓம் யஞ்ஞம யாய நமஃ, ஓம் ஸோமாய நமஃ, ஓம் பஞ்சவக்த்ராய நமஃ, ஓம் ஸதாஸிவாய நமஃ, ஓம் விஸ்வேஸ்வராய நமஃ, ஓம் வீரபத்ராய நமஃ, ஓம் கணநாதாய நமஃ, ஓம் ப்ராஜா

பதயே நமஃ, ஓம் ஹிரண்யரேதஸே நமஃ, ஓம் துத்த ரிஷாய நமஃ, ஓம் கிரீஸாய நமஃ, ஓம் கிரிஸாய நமஃ, ஓம் அநகாய நமஃ, ஓம் புஜங்கபூஷணாய நமஃ, ஓம் பர்க்காய நமஃ, ஓம் கிரிதந்விநே நமஃ, ஓம் கிரி ப்ரியாய நமஃ, ஓம் க்ருத்திவாஸஸே நமஃ, ஓம் புராராதயே நமஃ, ஓம் பகவதே நமஃ, ஓம் ப்ரமதாதிபாய நமஃ, ஓம் ம்ருத்யுஞ்ஜயாய நமஃ, ஓம் ஸூக்ஷ்மதநவே நமஃ, ஓம் ஜகத் வியாபிநே நமஃ, ஓம் ஜகத்குரவே நமஃ, ஓம் வ்யோமகேஸாய நமஃ, ஓம் மஹா ஸேந ஜநகாய நமஃ, ஓம் ஸாருவிக்ர மாய நமஃ, ஓம் ருத்ராய நமஃ, ஓம் பூதபதயே நமஃ, ஓம் ஸ்தாணவே நமஃ, ஓம் அகிர் புத்நியாய நமஃ, ஓம் திகம்பராய நமஃ, ஓம் அஷ்டமூர்த் தயே நமஃ, ஓம் அநேகாத்மநே நமஃ, ஓம் ஸாத்விகாய நமஃ, ஓம் ஸூத்தவிக்ரஹாய நமஃ, ஓம் ஸாஸ்வதாய நமஃ, ஓம் கண்டபாசுவே நமஃ, ஓம் அஜாய நமஃ, ஓம் பாஸவிமோச காய நமஃ, ஓம் மிருடாய நமஃ, ஓம் பஸூபதயே நமஃ, ஓம் தேவாய நமஃ, ஓம் மஹாதேவாய நமஃ, ஓம் ஹவ்யாய நமஃ, ஓம் ஹராயநமஃ, ஓம் பகநேத்ரபிதே நமஃ, ஓம் அவ்யக்தாய நமஃ, ஓம் தக்ஷாத்வரகாய நமஃ, ஓம் ஹராய நமஃ, ஓம் பூஷதந்தபிதே நமஃ, ஓம் அவ்யக்ராய நமஃ, ஓம் ஸஹஸ்ராக்ஷாய நமஃ, ஓம் ஸகஸ்ரபதே நமஃ, ஓம் அப வர்க்க ப்ரதாய நமஃ, ஓம் அநந்தாய நமஃ, ஓம் தாரகாய நமஃ, ஓம் பரமேஸ்வராய நமஃ, ஓம் ஸ்ரீ ஏகாம்பரேஸ்வா ஸிவாஷ்டோத்தா நாநாவித மந்த்ர புஷ்பாணி ஸமர்ப்ப யாமி.

சிவபக்தர்களா யிருக்கப்பட்டவர்கள் இந்த நூத்தி எட்டு மந்திரங்களால் அர்ச்சனை செய்யவேண்டும். இனி விஷ்ணுபக்தர்கள் அர்ச்சனை செய்யவேண்டிய மந்திரங்கள் இதனடியில் சொல்லுகின்றோம் அதுபோல் விஷ்ணுமூர்த்

தியை முன்சொல்லியதுபோல் பாதப் பெருவிரலிலிருந்து கிரீடம் வரையில் திருஷ்டித்துப்பார்த்து, கண்களைமூடி அவ்வுருவத்தை இருதயத்தில் நிறுத்தி உள்முகமாய் மனக் கண்ணால் பார்த்து அடியில் சொல்லப்போகும் மந்திரங்க ளால் அர்ச்சனைசெய்து முன்சொல்லப்போகும் பிரசாதங்க ளால் விநியோகம் காட்டவேண்டும். இனி விஷ்ணுவை உபாசனா மூர்த்தியாய்க் கொண்டவர்கள் அவ்விஷ்ணுவின் உருவம், கண்களைமூடி இருதயத்தில் நிறுத்தி மனக்கண் ணால் பார்த்து, இதனடியில் சொல்லும் விஷ்ணு அஷ் டோத்தர ஸதநாமங்களால் அர்ச்சனை செய்யவேண்டும்.

# ஸ்ரீ விஷ்ணு அஷ்டோத்தர ஸதநாமங்கள்.

ஓம் க்ருஷ்ணாயநமః, ஓம் கமலநாதாய நமః, ஓம் வாஸுதேவாய நமః, ஓம் ஸநாதனாய நமః, ஓம் வஸுதேவாத்மஜாய நமః, ஓம் புண்யாய நமః, ஓம் லீலாமாநுஷ விக்ரகாய நமః, ஓம் ஸ்ரீவத்ஸ கௌஸ்துபதாராய நமః, ஓம் யஸோதா வத்ஸலாய நமః, ஓம் ஹரயே நமః, ஓம் சதுர்புஜாத் தஸக்ரா ஸிகதாசங்காத்தியாயுதாய நமః, ஓம் தேவகீநந்தநாய நமః, ஓம் ஸ்ரீஸாய நமః, ஓம் நந்தகோப ப்ரியாத்ம ஜாய நமః, ஓம் யமுநாவேக ஸங்காரிணே நமః, ஓம் பலபத்ர ப்ரியானுஜாய நமః, ஓம் பூதநாஜீவிதகாராய நமః, ஓம் சங்கடாஸுர பஞ்சநாய நமః, ஓம் நந்த விருஷ நாந தாந்திநே நமః, ஓம் ஸச்சிதாநந்த விக்ரகாய நமః, ஓம் நவநீதவிலிப்தாங்காய நமః, ஓம் நவநீத நடாய நமః, ஓம் அநகாய நமః, ஓம் நவநீத நவாகாராய நமః, ஓம் முசுகுந்த ப்ரஸாதகாய நமః, ஓம் சோடசத்ர ஸகஸ்ரேஸாய நமః, ஓம் த்ரிபங்கினே நமః, ஓம் மதுராக்ருதயே நமః, ஓம் ஸுகவாகமிர்தத்தீந்தவே நமః, ஓம் கோவிந்தாய நமః, ஓம் யோகினும்பதயே நமః, ஓம் வஸ்தவாடஸராய நமః, ஓம் அநந்தாய நமః, ஓம் தேநுகாசுர பஞ்சநாய நமః, ஓம் த்ரிணீ க்ருதத்ருணாவாதாய நமః, ஓம் யமளார்ச்சுந பஞ்சநாய நமః, ஓம் உத்தலாதாலகோத்ரே நமః, ஓம் தமாலஸாமலாக்ருதயே நமః, ஓம் கோபகோபீஸ்வராய நமః, ஓம் யோகிநே நமః, ஓம் கோடிசூர்ய ஸம ப்ரபாய நமః, ஓம் இராபதயே நமః, ஓம் பரஞ்ஜோதிஷே நமః, ஓம் யிதவேந்திராய நமః, ஓம் யதூத்வகராய நமః, ஓம் வநமாலிநே நமః, ஓம் பீதவாஸஸே நமః, ஓம் பாரிஜாதாப

ஹாரகாய நமஃ, ஓம் கோவர்த்தநா ஸலோத்ரதே நமஃ, ஓம் கோபாலாய நமஃ, ஓம் ஸர்வ வாலகாய நமஃ, ஓம் அஜாய நமஃ, ஓம் நிரஞ்ஜநாய நமஃ, ஓம் காமஜகாய நமஃ, ஓம் கஞ்சலோசநாய நமஃ, ஓம் மதுக்நே நமஃ, ஓம் மதுரா நாதாயா நமஃ, ஓம் பலிநே நமஃ, ஓம் ப்ருந்தாவநாந்த ஸஞ் சாரிணே நமஃ, ஓம் துளஸீதாம பூஷண்ய நமஃ, ஓம் ஸ்வ மஸ்தக மநோகர்த்தரே நமஃ, ஓம் நரநாராயணுத்மகாய நமஃ, ஓம் குப்புஞ்சா கிருஷ்ணும்பரதாராய நமஃ, ஓம் மாயிநே நமஃ, ஓம் பரமபுருஷாய நமஃ, ஓம் மூஷிகாஸுர சார்த்தூர மல்லயுத்த விஸாரதாய நமஃ, ஓம் ஸம்ஸாரவைரிணே நமஃ, ஓம் கம்ஸாரயே நமஃ, ஓம் முராரயே நமஃ, ஓம் நரகாந்த காய நமஃ, ஓம் அநாதி பிரம்மசாரிணே நமஃ, ஓம் க்ருஷ்ண ரயி ஸநகநாய நமஃ, ஓம் ஸிஸுபால ஸிரச்சேதநாய நமஃ, ஓம் துரியோதந குலாந்தகாய நமஃ, ஓம் விதுரா க்ரூரவா தாய நமஃ, ஓம் விஸ்வரீவப் பிரதாசகாய நமஃ, ஓம் ஸத்ய வாஸே நமஃ, ஓம் ஸத்யஸங்கல்பாய நமஃ, ஓம் ஸத்யபாமர தாய நமஃ, ஓம் ஸயிநே நமஃ, ஓம் ஸுபத்ரா பூர்வஜாய நமஃ, ஓம் விஷ்ணவே நமஃ, ஓம் பீஷ்மமுக்தி ப்ரதாயகாய நமஃ, ஓம் ஜகத்குரவே நமஃ, ஓம் ஜகந்நாதாய நமஃ, ஓம் வேணு நாத விசாரதாய நமஃ, ஓம் வ்ரஷபாஸுர வித்வம்ஸிநே நமஃ, ஓம் பாணுஸுராந்தகாய நமஃ, ஓம் யுதிஷ்ட்ரப் பிர திஷ்டாத்திரே நமஃ, ஓம் ப்ரகி ப்ரகாவதஞ்சகாய நமஃ, ஓம் பார்த்தஸாரதயே நமஃ, ஓம் அவ்யக்தாய நமஃ, ஓம் கீதாம் ருத மகோத்தயே நமஃ, ஓம் காளிய பணிமாணிக் கராஞ்சித ஸ்ரீபதாம்புஜாய நமஃ, ஓம் தாமோதராய நமஃ, ஓம் யஞ்ஞ போக்திரே நமஃ, ஓம் தாநவேந்திர விநாஸகாய நமஃ, ஓம் நாராயணுய நமஃ, ஓம் பாப்ரம்ணே நமஃ, ஓம் பந்நகாஸ நவாகநாய நமஃ, ஓம் ஜவக்ரமாஸ மாஸக்தகோபீ வஸ்த்ராப

ஹராகாய நமஃ, ஓம் புண்ய ஸ்லோகாய நமஃ, ஓம் தீர்த்த பாதாய நமஃ, ஓம் வேதவேத்யாய நமஃ, ஓம் தயாநிதயே நமஃ, ஓம் ஸர்வதேவாத்மகாய நமஃ, ஓம் ஸர்வகடூர கரூபிணே நமஃ, ஓம் பராத பத்பராய நமஃ, ஓம் ஸ்ரீ விஷ்ணு அஷ்டோத்தர நாநாவித மந்த்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

இனி ஸ்ரீ சிவகாமசுந்தரியை உபாஸநாமூர்த்தியாய் நிஜேக்கப்பட்டவர்கள் ஸ்ரீ சிவகாமசுந்தரி அஷ்டோத்தர ஸதநாமங்களால் அர்ச்சனைசெய்ய இதனடியில் சொல்லுகின்ருேம். அதுபோல் செய்துவரக்கடவீர்களாக.

---

# ஸ்ரீ சிவகாமஸுந்தரி அஷ்டோத்தர ஸதநாமங்கள்.

ஓம் மஹாமநோந்மணி சத்தியை நமஃ, ஓம் ஸிவஸக்தியை நமஃ, ஓம் ஸிவஸங்கரியை நமஃ, ஓம் இச்சாஸக்தியை நமஃ, ஓம் கிரியாஸக்தியை நமஃ, ஓம் ஞாநஸக்தி சொரூபிண்யை நமஃ, ஓம் ஸாந்த்யாதீத கலாநந்தாயை நமஃ, ஓம் சிவமாயாயை நமஃ, ஓம் சிவப்ரியாயை நமஃ, ஓம் ஸர்வஞ்ஞாயை நமஃ, ஓம் ஸுந்தரியை நமஃ, ஓம் ஸௌம்யாயை நமஃ, ஓம் ஸச்சிதாநந்த விக்ரஹாயை நமஃ, ஓம் பராபராயை நமஃ, ஓம் பாலாயை நமஃ, ஓம் த்ரிபுராயை நமஃ, ஓம் குண்டல்யை நமஃ, ஓம் ஜயாயை நமஃ, ஓம் சிவாண்யை நமஃ, ஓம் பவாண்யை நமஃ, ஓம் ருத்ராண்யை நமஃ, ஓம் ஸர்வாண்யை நமஃ, ஓம் புவநேஸ்வரியை நமஃ, ஓம் கல்யாண்யை நமஃ, ஓம் சூலிஞ்யை நமஃ, ஓம் காந்தாயை நமஃ, ஓம் மஹா த்ரிபுர ஸுந்தரியை நமஃ, ஓம் மாலிந்யை நமஃ, ஓம் மாநிந்யை நமஃ, ஓம் ஸர்வாயை நமஃ, ஓம் மதநோல்லாஸ மோஹிந்யை நமஃ, ஓம் மஹேஸ்வரியை நமஃ, ஓம் மாதங்கியை நமஃ, ஓம் சிவகாம்யை நமஃ, ஓம் ஸிதாத்மிகாயை நமஃ, ஓம் காமாக்ஷியை நமஃ, ஓம் கமலாக்ஷியை நமஃ, ஓம் மீநாக்ஷியை நமஃ, ஓம் ஸர்வ ஸாக்ஷிண்யை நமஃ, ஓம் உமாதேவ்யை நமஃ, ஓம் மஹா காள்யை நமஃ, ஓம் ஸமாயைநமஃ, ஓம் ஸர்வஜந ப்ரியாயை நமஃ, ஓம் ஸித்வராயை நமஃ, ஓம் சித் கநாநந்தாயை நமஃ, ஓம் சிந்மயாயை நமஃ, ஓம் சித்சொரூபிண்யை நமஃ, ஓம் மஹாஸரஸ்வத்தியை நமஃ, ஓம் துர்காயை நமஃ, ஓம் பாலா துர்காயை நமஃ, ஓம் அதிதுர்காயை நமஃ, ஓம் லகுள்

ளியை நமஃ, ஓம் ஸுத்த வித்யாயை நமஃ, ஓம் ஸாரதா நந்த விக்ரஹாயை நமஃ, ஓம் ஸுப்ரபாயை நமஃ, ஓம் ஸுப்ரபாஜ்வாலாயை நமஃ, ஓம் இந்திராக்ஷியை நமஃ, ஓம் ஸர்வமோஹிந்யை நமஃ, ஓம் மஹேந்த்ரஜால மந்தியஸ் தாயை நமஃ, ஓம் மாயாயை நமஃ, ஓம் மதுவிநோதிந்யை நமஃ, ஓம் மந்த்ரேஸ்வரியை நமஃ, ஓம் மஹாலக்ஷ்மியை நமஃ, ஓம் மஹாகால பலப்ரதாயை நமஃ, ஓம் சதுர்வேத விஸே ஷஞ்ஞாயை நமஃ, ஓம் ஸாவித்ரியை நமஃ, ஓம் ஸர்வதேவ தாயை நமஃ, ஓம் மஹேந்த்ராண்யை நமஃ, ஓம் கணுத் யக்ஷாயை நமஃ, ஓம் மஹாபைரவ மோஹிந்யை நமஃ, ஓம் மஹாமாயாயை நமஃ, ஓம் மஹாதேவ்வியை நமஃ, ஓம் மல்பகாயை நமஃ, ஓம் மகிடாஸுர ஸம்ஹார்யை நமஃ, ஓம் சண்டமுண்டகுலாந்தக்நியை நமஃ, ஓம் சக்ரேஸ் வரியை நமஃ, ஓம் சதுர்வேத்யை நமஃ, ஓம் சக்ராதிஸுர நாயிகாயை நமஃ, ஓம் ஷட்ஸாஸ்த்ர நிபுணுயை நமஃ, ஓம் நித்திமியாயை நமஃ, ஓம் ஷட்தரிஸந வித்வக்ஷணுயை நமஃ, ஓம் காளராத்ரியை நமஃ, ஓம் கலாதீதாயை நமஃ, ஓம் கவிராஜ மனோஹராயை நமஃ, ஓம் ஸாரதா திலகாகாராயை நமஃ, ஓம் ருத்ராயை நமஃ, ஓம் பக்தஜநப்ரியாயை நமஃ, ஓம் உக்ரமாயை நமஃ, ஓம் மஹாமாரியை நமஃ, ஓம் க்ஷிய ப்ர மாரியை நமஃ, ஓம் ரணப்ரியாயை நமஃ, ஓம் அந்ந பூர்ணேஸ்வரியை நமஃ, ஓம் மாத்திரே நமஃ, ஓம் சுவர்ணு காரதடிப்ரபாயை நமஃ ஓம்சுரவியஞ்சந வர்ண்ணயாகியை நமஃ, ஓம் கத்ய பத்யாதிகாரணுயை நமஃ, ஓம் பதவாக் யார்த்தநிலயாயை நமஃ, ஓம் விந்துநாதாதி காரணுயை நமஃ, ஓம் மோக்ஷவ மகிஷியை நமஃ, ஓம் நித்யாயை நமஃ, ஓம் புக்திமுக்தி பல ப்ரதாயை நமஃ, ஓம் விஞ்ஞாநதா யிந்யை நமஃ, ஓம் ப்ரஞ்ஞாயை நமஃ, ஓம் ப்ரஞ்ஞாந பல

தாயிந்யை நமஃ, ஓம் அஹங்கார கலாசக்தியை நமஃ, ஓம் பராஸக்தியை நமஃ, ஓம் பராத்பராயை நமஃ, ஓம் ஸ்ரீ ஸிவகாம ஸௌந்தரியை நமஃ, ஓம் ஸ்ரீ சிவகாம ஸௌந்தரி ஸிவாஷ்டோத்தர நாநாவித மந்த்ர புஷ்பாணி ஸமர்ப்ப யாமி.

இனி ஸ்ரீ விநாயகரை உபாஸநா மூர்த்தியாய் நினைக் கப்பட்டவர்கள் ஸ்ரீ விநாயக அஷ்டோத்தர ஸதநாமங் களால் அர்ச்சனை செய்ய இதனடியில் சொல்லுகின்றோம். அதுபோல் செய்துவரக்கடவீர்களாக.

# ஸ்ரீ விநாயகர் அஷ்டோத்தர ஸத நாமங்கள்.

ஓம் விநாயகாய நம:, ஓம் விக்நராஜாய நம:, ஓம் கண நாதாய நம:, ஓம் கஜாநநாய நம:, ஓம் மஹோதராய நம:, ஓம் மஹாதேவாய நம:, ஓம் சித்தாஞ்சந ஸமுத்துதயே நம:, ஓம் ஏகதந்தோத்கடாய நம:, ஓம் தேவாய நம:, ஓம் கஜவக்த்ராய நம:, ஓம் மஹாபலாய நம:, ஓம் நாகயஞ்ஞோபவீதிநே நம:, ஓம் நாகாபரண பூஷிதாய நம:, ஓம் ஸர்வார்த்த ஸம்பதா தாராய நம:, ஓம் கணாத்யக்ஷாய நம:, ஓம் வரப்ரதாய நம:, ஓம் ருத்ராதநயாய நம:, ஓம் உதாராய நம:, ஓம் நாயகாய நம:, ஓம் ப்ரமாதிபாய நம:, ஓம் பத்மாரகத் துதயே நம:, ஓம் சோமாய நம:, ஓம் ரத்தமால்யாநுலேபநாய நம:, ஓம் அபலாய நம:, ஓம் பாலரூபிணே நம:, ஓம் ஸுமுகாய நம:, ஓம் ஸுப்ர ப்ரியாய நம:, ஓம் ப்ரபவே நம:, ஓம் புண்யாய நம:, ஓம் பூர்ணாய நம:, ஓம் பூர்ணோதராய நம:, ஓம் புண்ய கீர்த்தயே நம:, ஓம் புராதநாய நம:, ஓம் பத்திரே நம:, ஓம் ஸிவாய நம:, ஓம் ஸாந்தாய நம:, ஓம் ஜகந்நாதாய நம:, ஓம் ஸாஸ்வதாய நம:, ஓம் ஸ்வேத பரிதாநாய நம:, ஓம் த்ரயக்ஷாய நம:, ஓம் கநக ஸுப்ரபாய நம:, ஓம் ஸிவஸாம்யாய நம:, ஓம் மஹா தேஜஸே நம:, ஓம் மஹா ப்ராஞ்ஞாய நம:, ஓம் ஸர்வஞ்ஞாய நம:, ஓம் ஞாநஸம்பந்நாய நம:, ஓம் ஸர்வாபரண பூஷிதாய நம:, ஓம் பாப ரபநோதநாய நம:, ஓம் தேவாய நம:, ஓம் அலக்ஷ்மீமலநாஸநாய நம:, ஓம் குமாராய நம:, ஓம் காரணாய நம:, ஓம் காந்தாய நம:, ஓம் ஸர்வஸித்திப்ரதாயகாய நம:, ஓம் விபவே நம:, ஓம் ஈசாய நம:, ஓம் ஈசபுத்ராய நம:, ஓம் ஈப்ஸிதார்த்த ப்ரதாயகாய நம:, ஓம்

ஸ்ரீ தாய நமஃ, ஓம் ஸுபாய நமஃ, ஓம் ஏகதந்தாய நமஃ, ஓம் ஏகவீராய நமஃ, ஓம் அநேகதாய நமஃ, ஓம், ஏகாய நமஃ, ஓம் ஏக ப்ரதே நமஃ, ஓம் விஸ்வப் பிரதே நமஃ, ஓம் விஸ்வபுஜே நமஃ, ஓம் விஸ்வாய நமஃ, ஓம் ஸர்வஞ்ஞாய நமஃ, ஓம் ஸர்வபாவநாய நமஃ, ஓம் பாக்யதாய நமஃ, ஓம் பவதாய நமஃ, ஓம் பாகினே நமஃ, ஓம் போகதாய நமஃ, ஓம் போகபவநாய நமஃ, ஓம் கவயே நமஃ, ஓம் கார்யாய நமஃ, ஓம் கநீநாய நமஃ, ஓம் காத்ரே நமஃ, ஓம் க்ருதவே நமஃ, ஓம் க்ருதினே நமஃ, ஓம் க்ருத்யவிதே நமஃ, ஓம் அத்துக்ரியாய நமஃ, ஓம் காந்தர்ஸினே நமஃ, ஓம் க்ருதாந்தகாய நமஃ, ஓம் துதியாய நமஃ, ஓம் தோத்ரே நமஃ, ஓம் தோதாய நமஃ, ஓம் தோத்ராய நமஃ, ஓம் த்ரயீ மயாய நமஃ, ஓம் வேதாய நமஃ, ஓம் வேதாந்தக்ருதே நமஃ, ஓம் வேத்யாய நமஃ, ஓம் விதுஷாம் புத்திதாய நமஃ, ஓம் புத்தாய நமஃ, ஓம் ஓம்காராய நமஃ, ஓம் ப்ரம்மவிதே நமஃ, ஓம் ப்ராம்மண்யாய நமஃ, ஓம் ப்ரம்மணே நமஃ, ஓம் ப்ரம்மபராய நமஃ, ஓம் பராய நமஃ, ஓம் ஸர்வஞ்ஞாய நமஃ, ஓம் ஸத்கதயே நமஃ, ஓம் ஸர்வ லோகவேத்யாய நமஃ, ஓம் ஸர்வதாய நமஃ, ஓம் ஸுபகாய நமஃ, ஓம் ஸுல்யாய நமஃ, ஓம் ஸ்ரீ ஸித்தி விநாயகாய நமஃ, ஓம் ஸ்ரீ விநாயக ஸிவாஷ்டோத்தர நாநா வித மந்த்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

இனி ஸ்ரீ சுப்ரமண்யரை உபாஸநா மூர்த்தியாய் நினைக்கப்பட்டவர்கள் ஸ்ரீ சுப்ரமண்ய அஷ்டோத்தர ஸத நாமங்களால் அர்ச்சனை செய்ய இதனடியில் சொல்லுகின்றோம். அதுபோல் செய்து வரவேண்டும்.

---

## ஸ்ரீ சுப்ரமண்ய அஷ்டோத்தர ஸதநாமங்கள்.

ஓம் கந்தாய நமஃ, ஓம் குஹாய நமஃ, ஓம் ஷண்முகாய நமஃ, ஓம் பாலநேத்ர ஸுதாய நமஃ, ஓம் ப்ரபவே நமஃ, ஓம் பிங்களாய நமஃ, ஓம் கிருத்திகாஸூநவே நமஃ, ஓம் ஸிகிவாஹநாய நமஃ, ஓம் துவிஷட்புஜாய நமஃ, ஓம் திரிஷணேத்ராய நமஃ, ஓம் ஸக்த்திதராய நமஃ, ஓம் விகிதாஸிவ ப்ரபஞ்ஜநாய நமஃ, ஓம் தாரகாஸுர ஸம்ஹாரிணே நமஃ, ஓம் க்ஷோபல விமர்தநாய நமஃ, ஓம் மத்தாய நமஃ, ஓம் ப்ரமத்தாய நமஃ, ஓம் உந்மத்தாய நமஃ, ஓம் ஸுரஸைந்ய ஸுரக்ஷகாய நமஃ, ஓம் மதப ஸேனுபதயே நமஃ, ஓம் பிரஞ்ஞாய நமஃ, ஓம் க்ருபாளவே நமஃ, ஓம் பக்தவத்ஸலாய நமஃ, ஓம் உமாஸுதாய நமஃ, ஓம் ஸக்திதராய நமஃ, ஓம் குமாராய நமஃ, ஓம் க்ரௌஞ்ச தாரணாய நமஃ, ஓம் ஸேநாந்யே நமஃ, ஓம் அக்நி ஜந்மனே நமஃ, ஓம் விஸாகாய நமஃ, ஓம் ஸங்கராத்மஜாய நமஃ, ஓம் சிவஸ்வாமிநே நமஃ, ஓம் கண ஸ்வாமிநே நமஃ, ஓம் ஸர்வ ஸ்வாமிநே நமஃ, ஓம் ஸநாதநாய நமஃ, ஓம் அநந்த ஸக்தயே நமஃ, ஓம் அக்ஷோப்யாய நமஃ, ஓம் பார்வதீ ப்ரியநந்தநாய நமஃ, ஓம் கங்காஸுதாய நமஃ, ஓம் ஸரோத் பூதாய நமஃ, ஓம் பாவகாத்மஜாய நமஃ, ஓம் ஆஹுதயே நமஃ, ஓம் ஜ்ரும்பாய நமஃ, ஓம் பிரஜ்ரும்பாய நமஃ, ஓம் உஜ்ஜ்ரும்பாய நமஃ, ஓம் கமலாஸந ஸம்ஸ்துதாய நமஃ, ஓம் ஏகவர்ணாய நமஃ, ஓம் த்விவர்ணாய நமஃ, ஓம் த்ரிவர்ணாய நமஃ, ஓம் சதுர்வர்ணாய நமஃ, ஓம் பஞ்சவர்ணாய நமஃ, ஓம் ப்ரஜாபதயே நமஃ, ஓம் அபாய நமஃ, ஓம் அக்நி கர்ப்பாய நமஃ, ஓம் ஸமீ கர்ப்பாய நமஃ, ஓம் விஸ்வரேதஸே

நமஃ, ஓம் ஸுராரிக்நே நமஃ, ஓம் ஹிரண்ய வர்ணாய நமஃ, ஓம் ஸுபக்ருதே நமஃ, ஓம் வடுவேஷ ப்ருதே நமஃ, ஓம் பூஷ்ணே நமஃ, ஓம் கபஸ்திநே நமஃ, ஓம் கஹநாய நமஃ, ஓம் சந்த்ர வர்ணாய நமஃ, ஓம் கலாதராய நமஃ, ஓம் மாயாதராய நமஃ, ஓம் மஹாமாயிநே நமஃ, ஓம் கைவல்யாய நமஃ, ஓம் கலாத்மகாய நமஃ, ஓம் விஸ்வயோநயே நமஃ, ஓம் அமேயாத்மநே நமஃ, ஓம் தேஜோநிதயே நமஃ, ஓம் அநாமயாய நமஃ, ஓம் பரமேஷ்டிநே நமஃ, ஓம் குரவே நமஃ, ஓம் பர ப்ரஹ்மணே நமஃ, ஓம் வேதகர்ப்பாய நமஃ, ஓம் விராஜிஸே நமஃ, ஓம் வஸவே நமஃ, ஓம் புளிந்த கந்யா பர்த்ரே நமஃ, ஓம் மஹா ஸாஸ்வத ப்ரதாய நமஃ, ஆஸ்ரதாகில தாத்ரே நமஃ, ஓம் சோரக்நாய நமஃ, ஓம் ரோகநாசநாய நமஃ, ஓம் அநந்தமூர்தயே நமஃ, ஓம் ஆநந்தாய நமஃ, ஓம் ஸிகண்டி க்ருதகேதநாய நமஃ, ஓம் டம்பாய நமஃ, ஓம் பரமடம்பாய நமஃ, ஓம் மஹாடம்பாய நமஃ, ஓம் விருஷாகபயே நமஃ, ஓம் காரணோபாத்த தேஹாய நமஃ, ஓம் காரணாதீத விக்ரஹாய நமஃ, ஓம் அநீஸ்வராய நமஃ, ஓம் ப்ராணாய நமஃ, ஓம் ப்ராணதாராய நமஃ, ஓம் பராத்பராய நமஃ, ஓம் விருத்த ஹந்த்ரே நமஃ, ஓம் வீரக்நாய நமஃ, ஓம் ரக்தாய நமஃ, ஓம் சாமாய நமஃ, ஓம் பிங்களாய நமஃ, ஓம் பகுவர்ணாய நமஃ, ஓம் கோபதயே நமஃ, ஓம் தக்ஷிணாத்ய பாப்ரதாய நமஃ, ஓம் ஸர்வேஸ்வராய நமஃ, ஓம் லோக குரவே நமஃ, ஓம் அஸுராநீக மர்தநாய நமஃ, ஓம் ஸுப்ரஹ்மண்ய மூர்த்தயே நமஃ, ஓம் ஸ்ரீ ஸுப்ரமண்ய ஸிவாஷ்ட்டோத்தர நாநாவித மந்த்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி.

இவ்விதமாய் மானசபூஜை செய்துவரப்பட்டவர்கள் எந்தக்கோவில்களுக்கும் போகவேண்டிய அவசியமில்லை; வெளிக்கோவில்களிலுள்ள விக்கிரஹங்களைத் தரிசிக்கப்

போனவுடன் மூலஸ்தானத்தில் ஒருவரோடொருவர் இடியுண்டு வியர்த்து மூலவிக்கிரகத்தை அர்ச்சகன் சரியாய்ச் சேவிக்கவிடாமல் போங்கள் போங்கள் என்று துரத்திவிடுவான். ஆதலால், வீட்டில் ஏகாந்தமான இருட்டு அறையில் சித்தாஸனத்தில் அல்லது பத்மாஸனத்தில் உட்கார்ந்து கண்களைமூடி அசைவர உட்கார்ந்து எவரெவர்களுக்கு எந்தெந்த தேவதைகளின்மீது பிரீதியோ அந்ததேவதை ஒன்றைமாத்திரம் இருதயத்தில் நிறுத்தி இந்நூலாசிரியன் மானச பூஜை செய்துவந்ததுபோல் செய்துவந்தால் மனம் வெளி வியவகாரங்களில் ஓட அவகாசமிராமல் உள் நாட்டத்திலேயே யிருந்து பூஜையில் மனம் லயித்து வருவதனால் அப்போது அநேக ஆயிரம் எண்ணமுடைய மனம் ஓர் நிலையில் அசையாத தீபம்போல் நின்றுவிடும். பிறகு அப்பியாச முதிர்ச்சியினால் அந்த ஓர் நிலையும் அற்று தானே தானாவான். ஆதலால் நீங்கள் இதை நன்றாய் அறியும் பொருட்டே இந்நூலில் கணபதி, விஷ்ணு, பார்வதி, படங்களின் கர்பத்தில் புள்ளிகள் வைத்துக் காட்டப்பட்டிருக்கின்றது.

மறுபக்கம் காட்டியிருக்கும் கணபதி, விஷ்ணு, பார்வதி, முதலாகிய விக்கிரகங்களின் ரூபம், மானஸ பூஜை செய்யப்பட்டவர்களின் கர்ப்பத்தில் நிறுத்தி கண்களைமூடி அந்த உருவத்தை மனக்கண்ணால் பார்த்து மனதினால் அர்ச்சனை செய்துவரும் ஓம் என்னும் மந்திரங்களை, விக்கிரகங்களின் கண்டம் முதல் நாபிவரையில்...........புள்ளிகளாய் வைத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. அதாவது, பூஜை செய்ய உட்கார்ந்து கண்களைமூடி எவரெவர்களுக்கு எந்தெந்த பகவான்மீது பிரீதியோ அந்த பகவானை † உபாசனா

† உபாஸனாமூர்த்தி வழிகாட்டும் கடவுள்.

1




2




மானஸ தியானே உபாஸன பூஜா தேவதா விஸ்வ விராட் ரூபபாவனை

ఓం
ప్రణవము

3




4




5




6




మానసధ్యానోపాసన పూజా, దేవతా విశ్వవిరాట్ - రూపభావన

மூர்த்தியாய் நினைத்து இருதயத்தில் நிறுத்தி, அவ்விக்கிரகத்தை மனக்கண்ணால் பார்த்து ஓம் சிவாய நமஃ, ஓம் மஹேஸ்வாராய நமஃ, ஓம் சம்புவே நமஃ, என்று மனதினால் உச்சரிக்கும் பிரணவ மந்திரங்களே புள்ளிகளாய்க் காட்டப்பட்டதென்று அறியவேண்டும் என்றால், நாம் பிரணவத்தினால் அர்ச்சனைசெய்யும் மந்திரங்கள், இருதயத்தில் நிறுத்திவைத்த பகவானை அர்ச்சனை செய்கின்றதென்று இதனுள் காட்டியிருக்கும் விக்கிரகத்திற்குக் கண்டம் முதல் நாபிவரையில்..............புள்ளிகள்வைத்து காட்டியிருக்கின்றது.

இவ்வாறு செய்துவருவதே தியானமாகும். இதுவரையில் அச்சிட்டிருக்கும் ஜீவப் பிரம்மைக்ய நூலில் காட்டிய கணபதி, விஷ்ணு, பார்வதி, முதலாகிய படங்களில் இந்த ரகஸ்யம் சொல்லவில்லை. அதன் ரகஸ்யம் இப்போது சொல்லப்பட்டது.

அன்றியும் முன்பக்கம் காட்டியிருக்கும் 4. 5, 6 படங்கள் பிராணாயாம, பிரத்தியாஹார தாரண, தியான, சமாதி படங்களென்று அறியவேண்டும். இவைகள் யோகத்தில் சேர்ந்தது. அதை இங்கு விவரித்துச் சொல்லுகின்றோம் கேளுங்கள்.

யோகாப்பியாசம் செய்ய மிகவும் பரிசுத்தமான இருட்டு அறையில் மணையின்மீது மான்தோல்போட்டு அதன்மேல் வெள்ளைவஸ்திரம் மடித்துப்போட்டு அதன்மேல் வடக்குமுகமாய் உட்கார்ந்து வாய்க் கண்களை மூடி சுவாசம் மூக்கின் ரந்திரங்களின் வழியாய் பிராணாயாமத்தில் சொல்லியதுபோல் உள்ளுக்கிழுத்து விழுங்கி அதை வெளி விடாமல் நிறுத்தினால் அந்தசுவாசம் சரீரமெங்கும் ஓடித் திரிந்து அனேகவருட பழக்கத்தால் நாளுக்குநாள் சிருகச்

சிருக அந்தசுவாசம் தேகமெங்கும் திரிந்து மண்டை ஓட்டை துளைத்துக்கொண்டே வந்து கடைசியில் உச்சிதோல், அன்று பிறந்த குழந்தையின் உச்சிதோல் மண்டையின்மீது எவ்வளவு மெதுவாய் மூடிக்கொண்டிருக்குமோ அதுபோல், மண்டைதோல் சித்தியடைந்த யோகிக்கு மிகவும் மிருதுவாயிருக்கும். யோகி மண்டையையும் மண்டைத்தோலையும் சுவாசத்தினால் துளைத்து தயார்செய்துவைத்துத் தான், எப்பொழுது ஆத்மாவை விடவேண்டுமென்று நினைக்கின்றானோ அந்த க்ஷணம் பிராணாயாம மகிமையினால் உச்சியைத் திறந்து, ஆத்மாவை விட்டுவிடுவான். அப்படிப்பட்டவனுக்கு புனர்ஜனனமில்லை. விசேஷமாய் பிராணாயாமம் செய்து வந்தவனுக்கு சுவாசம் சரீரமெல்லாம் ஓடித்திரியும்: சரீரத்தில் சுவாசம் ஓடுவதை 6-வது நெம்பர் படத்தில் காட்டியிருக் கின்றது அதைப்பாருங்கள்: சுவாசம் சரீரமெல்லாம் இவ்விதமாய் ஓடித்திரிந்து கடைசியாய் மண்டைவெடித்து கிளம்பிவிடும். அதையும் கவனியுங்கள் இதுவும் ஆறும் நெம்பர் படத்தில் காட்டியிருக்கின்றது. மோக்ஷமடையும் ஜீவனுக்கு இதுவே கடைசியான பதவி. அது இங்கு 6-வது, நெம்பரில் காட்டப்பட்டிருக்கின்றது ;

2. சுவாசம் மூக்கின்வழியாய் இழுத்து நிறுத்திய போது வெகுநாள் பழக்கத்தால் அந்தசுவாசம், கர்ப்பத்திலிருந்து குதஸ்தானத்தின் வழியாய், முதுகெலும்பின் மத்தியிலிருக்கும் வெள்ளை நரம்பில் (Spinalcordடில்) மிகவும் சிறிய ரந்திரங்களுண்டு அந்த ரந்திரங்களின் வழியாய் சுவாசம் ஏறி, பிரம்ம கபாலத்தில் (சிரசின் உச்சியில்) போய் அவ்விடமிருந்து நாபிக்கு (தொப்புளுக்கு)ச் சென்று அங்குள்ள குண்டலி ஸக்தியைக் கிளப்பிவிடும். அப்போது, நெற்றியில் ஜோதி காணப்படும். நெற்றியில் காணப்

படும் ஜோதியானது 5-வது நெம்பர் படத்தில் காட்டப் பட்டிருக்கின்றது. அதை கவனியுங்கள்.

3. இவ்விரண்டும் முடித்தயோகி சுவாசம் அடக்கி சும்மாய் உட்கார்ந்தால் அந்த சுவாசம் 6-வது நெம்பர் படத்தில் காட்டியதுபோல் தேகமெல்லாம் சுற்றித் திரிந்து சரீரத்திலிருக்கும் எழுபத்து ஈராயிரம் நாடிகளையும் கிளப்பி விடும். சுவாசம் நாடிகளைக் கிளப்பி விட்டால் அவைகளுக் குக் கோபமுண்டாய் ஓம் காரத்துடன் சர்ப்பம்போல் சீறி தசவித (பத்துவித) நாதங்கள் விசேஷமாய்க் காதுபிளக்கும் படி இராப்பகலாய் "ஓம்" என்னும் சப்தம் சதா ரீங்காரம் செய்துகொண்டிருக்கும். அப்போது அந்த ஓம்காரத்தில் மனதை நாட்டி கேட்டுக் கொண்டிருந்தால் சுருதிப் பிரமாணங்களுடன் முன் சொல்லப்போகும் தசவித நாதங்கள் "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரகஸ்யத்தில்" சொல்லிய எல்லாம் அந்த ஓம்காரத்திலிருந்து கேட்க லாம். சின் முத்திரையைப் பிடித்து சித்திரப்பதுமை போல் உட்கார்ந்து நாத சப்தங்களை ஆனந்தமாய்க் கேட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் சிரசிலிருந்து அம்ருத மானது யோகாக்நி சுவாலையினால் கரைந்து மூலரந்திரத்தி லிருந்து கண்டத்தின் வழியாய் பத்து நிமிஷங்களுக்கு ஒரு முறை சொட்டுச் சொட்டாய் இருந்தாப்போலிருந்து குபீ லெனவிழுந்து வயற்றிற்குள் செல்லும். அமிருதம் மண்டையிலிருந்து வரும்போது நன்றாய்தெரியும்; அது தொண்டையிடம் வருமுன் கண்டத்தைமூடி அந்த அம்ருதத்தை வாயில் கொண்டுவந்து கையில் வைத்துப் பார்த்தால் அது இளம் நுங்கு எப்படியிருக்குமோ அது போல் குண்டுமணி அவ்வளவு யிருக்கும். முன் சொல்லிய நாதசப்தங்களும், மண்டையிலிருந்து அம்ருதம் சொட்டுச்

சொட்டென்று விழுவதும் அடியேனுக்கு பிரத்தியக்ஷ திருஷ்டாந்தமாதலால் அதை இங்கு சொல்ல நேரிட்டது. இந்த அம்ருதம் சிரசின் மூலரந்திரம் வழியாய் வருகின்ற தென்பதற்குச் சுருதிப் பிரமாணம் இதனடியில் சொல்லு கின்றோம் :

“ ஷஷ்டும் தாலுசக்கரம் தத்ர அம்ருத தாரா ப்ரவாஹ
கண்டிகா மூலரந்த்ர ராஜதந்தி ஸந்திநி விவரத்வாரம்
தத்ர ஶூந்யம் த்யாயேத் சித்தலயோ பவதி.”

போகியானவன் நாதசப்தங்களைக் கேட்டு அம்ருத பானம் செய்துகொண்டிருந்து கடைசியில் மனம் சூன்ய மாய் பிரம்மானந்த பதவியை அடைவான். யோகாப்பி யாசம் சித்தியடைந்த மஹான்களுக்கு நாபியிலிருந்து யோகாக்நி உண்டாகும். அந்தயோகாக்நி கணபதிபடத் திற்கு 4-வது நெம்பர் படத்தில் காட்டப்பட்டிருக்கின் றது. அதைப்பாருங்கள் : இந்தயோகாக்நி சஞ்சிதமென் னும் புண்ய பாபங்களின் மூட்டைகளையெல்லாம் சாம்ப லாய் எரித்துவிடும். அன்றியும் சூர்யமண்டலம் சந்திர மண்டலம் நட்சத்திரமண்டலம் யாவும் நம்மில் அடங்கி யிருப்பதனுல் அதை கணபதி, விஷ்ணு, பார்வதி, முத லாகிய படங்களின் சிரசுகளுக்குமேல் அம்மண்டலங் களை எழுதி காட்டப்பட்டிருக்கின்றன அதை கவனியுங் கள் : சிரத்தையுடன் பக்தி, தியானத்திலிருக்கப்பட்டவர் களுக்குத் தப்பாமல் யோகம் சித்திக்கும். அடியேன் பன்னிரெண்டாம் வயதில் எவர்களிடமும் உபதேசம் பெறுமல் காஞ்சிமா நகரிலுள்ள ஸ்ரீ ஏகாம்பரீஸ்வரரை உபாஸனு மூர்த்தியாகக்கொண்டு தனக்குத்தானுய் செய்து வந்த மானஸ பூஜையை இதனடியில் படத்தின்மூல மாய்க்காட்டிச் சொல்லுகின்றோம் கேளுங்கள் : எந்த குரு

உபதேசமில்லாமல் தனக்குத்தானுய் உண்டாகும் பக்தியே விட்டகுறையென்றும் தொட்டகுறையென்றும் சொல்லப்படும். அதாவது, ஈசுவரபக்தி பூர்வஜன்மத்தில் எதுவரையில் செய்துவிட்டு மரணமடைகின்ருனே மறுஜன்மத்தில் தான் முன்ஜன்மத்தில் எங்கு செய்துவிட்டானே அவ்விடமிருந்து மறுபடியும் தொடர்ந்து இந்த ஜன்மத்தில் பக்தி செய்துவருவான். இவ்வாறு தனக்குத்தானுய்ச் செய்துவரும் ஈசுவரபக்தியே விட்டகுறையென்றும் தொட்டகுறை யென்றும் சொல்லப்படும். இந்த விட்டகுறை தொட்டகுறைகளுக்கு அடியேனுடைய சுவானுபவமே இங்கு திருஷ்டாந்தமாய், ஸ்ரீ ஏகாம்பரீசுவரர் ஸ்ரீ ஜம்புகேசுவரர் முதலாகிய படங்களின் மூலமாய் 52-வது, பக்கம் காட்டித் தெரியச் சொல்லுகின்ருேம் கேளுங்கள்;

---

# இந்நூலாசிரியர் சரித்திரம்.

ஓ சகோதரி! ஓ சகோதரர்களே!

ஓர் பகவானை இருதயத்தில் நிறுத்தி மானஸபூஜை செய்யவேண்டுமென்று இதற்குமுன் சொல்லியிருக்கின்றோம்; ஆதலால், சிவனென்றும் விஷ்ணுவென்றும் பேத புத்தியில்லாதவர்கள் எல்லோரும் இதில் காட்டியிருக்கும் ஸ்ரீ ஜம்புகேசுவரரையாகிலும் அல்லது ஸ்ரீ ஏகாம்பரீசுவரரையாகிலும் நன்றாய் திருஷ்டித்துப்பார்த்து முடிந்தவுடன் ஒரு இருட்டு ஏகாந்தமான அறையில் வாசனை வஸ்துக்களை வைத்து பெரிய மணையின்மீது மான்தோல் போட்டு அதன்மேல் வெள்ளை வஸ்திரம் மடித்து விரித்து அதன்மேல் வடக்குமுகமாய் சித்தாசனத்துடன் உட்கார்ந்து இடுப்பு கூன் வளையாமல் சித்திரப்பதுமைபோல் அசைவற நின்று சின்முத்திரையை விரல்களால் பிடித்து, இதற்குமுன் கண்கள் மூலமாய்த் தரிசித்த ஸ்ரீ ஜம்புகேசுவரர் அல்லது ஸ்ரீ ஏகாம்பரீசுவரர் இவ்விருவர்களில் எவர்களையாகிலும் ஒருவரை, உபாசனாமூர்த்தியாய் (வழி காட்டும் கடவுளாய்) எண்ணி இருதயத்தில் நினைத்தவுடன், அவ்வுருவம் அங்குவந்து நிற்கும். அவ்வுருவத்தை உள்முகமாகவே மனக்கண்ணால் பார்த்து அடியில் சொல்வதுபோல் பன்னிரெண்டு வருடங்கள் மானச பூஜை செய்து வந்தால் யோகியாவான்.

அடியேன் பன்னிரெண்டு வயதில் ஸ்ரீ காஞ்சிமா நகரிலுள்ள பச்சையப்பன் ஸ்கூலில் படிக்கும்போது, ஒரு நாள் காஞ்சியிலுள்ள எல்லா கோவில்களையும் பார்க்கவேண்டுமென்று எண்ணமுண்டாய், ஸ்ரீ காஞ்சிவாதர், ஸ்ரீ நரசிங்கர், ஸ்ரீ உலகளந்தப்பெருமாள், ஸ்ரீ பச்சைவெண்ணர், ஸ்ரீ வைகுண்டப்பெருமாள், ஸ்ரீ காமாக்ஷியம்மன், ஸ்ரீ கச்சாலநாதர், ஸ்ரீ சுப்ரமண்யர், ஸ்ரீ சப்பாணிப்பிள்ளை


Sri Ekambareswarar.
ஸ்ரீஏகாம்பரநாதர்.
BULL
நந்தி.
SRI JAMBUKESWARAR,
TIRUVANAIKKAVAL
திருவானைக்காவல்
ஸ்ரீ ஜம்புகேஸ்வரர்.
ALTAR.
பலிபீடம்.

யார் எதிரில் யிருக்கும் ஸ்ரீ ஏகாம்பரநாதர் முதலாகிய கோவில்களுக்குச் சென்று அங்குள்ள மூலவிக்கிரகங்களைத் தரிசித்து வீடுசேர்ந்து, இரவு போஜனமுண்டு சயனித்து ஆஹா! இதென்ன ஆச்சர்யம்: பகவானுக்கு இத்தனை ரூபங்களுண்டா? அவன் ஒரே ரூபமாயல்லவா இருக்க வேண்டும்: அப்படியிராமல், ஒன்று பெரிதாயும் ஒன்று சிறிதாயும் ஒன்று குட்டையாயும் ஒன்று உயரமாயும் மற்றொன்று பயங்கர கோரரூபமுடையதாயும் இருக்கின்றனவே யென்று, வெகு நேரம்வரையில் ஆலோசித்துப் பிறகு ஓர் எண்ணம் தோன்றிற்று, அதாவது, நாம் சிவ குலத்தில் பிறந்ததனால் சிவனையே பூஜை செய்யவேண்டு மென்று எண்ணி அதிகாலையில் ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஸந்நதிக்குச் சென்று அங்கு குருக்கள் எவ்வாறு பூஜை செய்கின்றார்களோ அதைப்பார்த்து அதுபோல் நாமும் மனதினால் பூஜை செய்யலாமென்று நினைத்து நித்திரைசெய்து அதிகாலையில் எழுந்து, நித்தியக்கடனை முடித்து ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஆலயத்திற்குச் சென்று மூலஸ்தானத்தினிடம் நின்றிருந்தபோது, கோவில் குருக்கள் வந்து மூலஸ்தானக் கதவைத் திறந்து ஸ்ரீ ஏகாம்பரநாதருக்கு முன்னாள் அணிந்திருந்த பூணூல் ஆடை முதலானவைகளைக் களைந்து, ஸ்ரீ ஏகாம்பரநாதர் மணல் லிங்க பாவனையாதலால் லிங்கத்திற்கு அபிஷேகம் செய்யாமல் ஆவடையாருக்குமாத்திரம் அபிஷேகம் செய்து, மறுபடியும் ஸ்ரீ ஏகாம்பரநாதரை அலங்கரித்து வில்வத்தால் அர்ச்சனைசெய்து தூபதீப நைவேத்தியங்கள் காட்டினார். இவைகளையெல்லாம் அடியேன் நன்றாய்ப்பார்த்து முடிந்தவுடன் வீடு சென்று அன்று முதல் ஸ்ரீ ஏகாம்பர நாதரை உபாசனமூர்த்தியாகக் கொண்டு பின்வருமாறு மானஸ பூஜை செய்துவந்தனன்.

ஐயா! அடியேன் 1877ஞூ ஸ்ரீ காஞ்சி பச்சையப்பன் ஸ்கூலில் வாசிக்குங்காலத்தில் பன்னிரெண்டு வயதுடைய சிறியவனுதலால் எவர்களிடமும் உபதேசம் பெருமல் தனக்குத்தானுகவே செய்துவந்த மானஸ பூஜையை இதனடியில் சொல்லுகின்ரேம் கேளுங்கள். வீட்டில் பூஜை அறையில் மான்தோல் ஆசனமுடைய மணையின்மீது அடியேன் வடக்குமுகமாய் உட்கார்ந்து கண்களைமூடி அசைவாநின்று சின்முத்திரையைப் பிடித்து பிறகு அடியேனுடைய இருதயத்தில், நான்கு பக்கங்களிலும் மிகவும் பெரிய தங்க மதில்சுவர்கள் மனதினுல் நினைத்துக்கட்டி முடித்து, அந்த மதில்சுவருக்கு கிழக்குமுகமாய் பதிஞெரு தங்கக் கலசங்களையுடைய பெரிய தங்க கோபுரமும் மனதினுல் சிருஷ்டி செய்து, மூலஸ்தான கோவிலுக்காக அதன் மத்தியில் எட்டடி உத்தளவுவைத்து, அதைச்சுற்றிலும் நான்கு பக்கம் தங்க சுவர்களைக்கட்டி மூலஸ்தானத்தின்மேல், நெல்லிக்கனி வட்டமாய் தங்கத்தினுல் கோபுரம்கட்டி, அதற்குமேல் ஏக தங்கக்கலசம் மனதினுல் சங்கல்பித்து வைத்து முடிந்தவுடன், மூலஸ்தானத்தில் ஸ்ரீ ஏகாம்பரீசுவரரை எழுந்தருளச்செய்ய இரண்டடி உயரத்தில் நவரத்தினங்களிழைத்த மேடையை மனதினுல் சிருஷ்டி செய்து (கட்டி), அதன் புறமாய் வினியோகப் பிரசாதங்களையெல்லாம்வைக்க, இரண்டடி உயரமும் ஆறடி, நீளமும் ஒன்றரையடி அகல முள்ள ஒரு தங்கப்பலகையும், சுவாமிக்கெதிரில் இரண்டு மாணிக்கக் குத்துவிளக்குகளையும் மனதினுல் சிருஷ்டிசெய்து முடித்து வைத்துப் பிறகு மூலவர் ஸன்னிதானத்திற்கு, வெங்கல மணிகளையுடைய இரண்டு தங்க இரக்கை கதவுகளையும் மனதில் நினைத்து, அதை வாசற்படிகளில் கோர்த்து, மாணிக்கம் தங்கம் முதலானவைகளினுல் கோவில் வேலையை மனதி

ணல் சிருஷ்டிசெய்து (கட்டி) பூர்த்திசெய்து பிறகு, மூலஸ்த் தானத்திற்குக் கிழக்குமுகமாய் ஒரு பெரிய மடப்பளி தங்கத்தினல் கட்டிமுடித்து: அதில் மிகவும் திவ்யமான பச்சரிசி பயரு மிளகு சீரகம் கடுகு உப்பு மிளகாய் புளிகாய் பதார்த்தங்கள் காயம் சிரேஷ்டமான காமதேனுவின் நெய் பால் தயிர் வெண்ணெ கற்கண்டு குங்குமம் பூ பச்சைக்கர்ப் பூரம் கடலேமா கோதுமைமா உளுத்தம் பருப்பு முன் சொல்லப்போகும் பழதினுசுகளும், உரல் உலக்கை அம்மி துடப்பம் முறம் முதலானவைகளும் தங்கப்பாத்திரம் இவைகளையெல்லாம் தங்கமடப்பளிக்குள், ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெரிய தங்கபானையில் இருக்கவேண்டும் என்று மனதினல் நினைத்தவுடன் அதுபோல் அங்கு காணப்பட்டது. பிறகு கோவில் மதில் சுவர்களுக்கு மத்திபிலிருக்கும் வெளியில் மூலஸ்தானத்திற்குப் பின்புறம், நவரத்தினங்களிழைத்த பத்துப்படிகளையுடைய ஒரு திருக்குளம் மனதினல் நினைத்துக்கட்டி முடித்து அதில், கங்கை ஆறு படிகள் வரையில் வரவேண்டுமென்று மனதினல் நினைத்தவுடன் கங்கை அதுபோல் வந்து நிறைந்தனள். பிறகு அவ்வாலயத்திற்குள் ஓரிடம் குறிப்பிட்டு அங்கு, தேவலோகத்தினுள்ள மிகவும் சிரேஷ்டமான வாசனையுடைய பாரிஜாத புஷ்ப நந்தவனத்தைவிட மிகவும் சிரேஷ்டமான நந்தவனமும், செழிப்பாய்த் தழிந்துத் தாழ்ந்த வில்வமரங்களும் உண்டாகவேண்டுமென்று மனதினல் நினைத்தவுடன் யாம் குறித்தயிடத்தில் அதுபோல் அங்கு உண்டாயிற்று. பிறகு முன் இருதயத்தில் மூலஸ்தானத்தில் நவரத்தினங்களால் கட்டிவைத்த தங்கமேடையின்மீது அடியேனுடைய உபாசன மூர்த்தியாகிய ஸ்ரீ ஏகாம்பரீசுவரரை எழுந்தருளச்செய்து அங்கு அமைத்துவைத்த மாணிக்கக்

குத்து விளக்குகளை மனதினால் ஏற்றி பிறகு, பத்து பிராம ணர்களுக்குப் பெயர் வைத்து மனதில் நினைத்தவுடன் அவர்களெல்லோரும் அடியேன் எதிரில், பயாஸ்கோப்பில் படங்கள் வந்து வாய்ப்பேசாமல் நிற்பதுபோல் நின்றார்கள். அவர்களில் ஐந்து பெயரை தங்கமடப்பள்ளிக்குச் சென்று அங்கு சேகரித்து வைத்திருக்கும் அமுதுபடி முதலாகிய சாமக்கிரியைகளினால், ஈசுவர ஆராதனைக்கு திவ்யமான சர்க்கரைப்பொங்கல் வெண்பொங்கல் மிளகு பொங்கல் கதம்பம் புளியோரை தத்யோதனம் முதலாகிய பிரசாதங் களும், தேன்குழல் அப்பம் வடை நெய்த்தோசை புட்டு நெய்யப்பம் பாயாசம் முதலாகிய பக்ஷணங்களும், தோல் சீவிய மல்கோவா பேணிஷா தில்பசந்து காதர்பசந்து முதலாகிய மாங்கனிகளும், செவ்வாழை பேவாழை பச்சை வாழை பலா சாத்துக்குடி கமலா அத்தி மாதளம் முதலா கிய பழவர்க்கங்களைத் தங்கத்தட்டில் திருத்திவைத்து, காம தேனுவின்பாலில், கற்கண்டு குங்குமப்பூ பச்சைக் கர்ப்பூரம் முதலானவைகளைச் சேர்த்து, ஏடுபடிய சுண்டக் காய்ச்சி பெரிய தங்கக்கிண்ணத்தில் விட்டு, வாசனைக் கற்கண்டு களால் வெண்ணெ கலந்து தங்கக்கிண்ணத்தில் வைத்து, ஏடு படிந்த காமதேனுவின் கட்டித்தயிரும் தங்கக்கிண்ணத்தில் விட்டு அதிசீக்கிரமாய் தயார்செய்து வினியோகத்திற் குக் கொண்டுவர வேண்டுமென்று மனதினால் நினைத்த வுடன் அவர்கள் ஐந்துபேரும் தயார்செய்ய மடப்பள்ளிக் குச் சென்றுவிட்டார்கள். பிறகு மற்ற ஐந்து பெயர்க ளில் மூவரை, நந்தவனத்திற்குச் சென்று வில்வ புஷ்பங் களை பூக்குடலைகளில் கொண்டுவரவேண்டு மென்று மனதி னால் நினைத்தவுடன், அவர்கள் நந்தவனம் சென்றுவிட்டார் கள். பிறகு மற்ற இருவர்களையும், மூலஸ்தானத்திலுள்ள

ஸ்ரீ ஏகாம்பரீசுவரருக்கு அபிஷேகம் செய்ய அழைத்துச்சென்று, அங்கு மாணிக்கக் குத்துவிளக்குகளின் பிரகாசத்தினுல் பிரகாசித்துக்கொண்டிருக்கும் அடியேனுடைய ஆண்டவனுகிய ஸ்ரீ ஏகாம்பரீசுவரருக்கு, அபிஷேகம் செய்யவேண்டுமென்று மனதில் நினைத்தவுடன், அவர்கள் இருவரும் மேல்வேஷ்டியை இடுப்பில் இழுத்துக்கட்டி ஒரு பிராம்மணர் அபிஷேகம்செய்ய நின்றூர்: மற்ருெரு பிராம்மணர் அபிஷேகத்திற்குத் தைலம் கொடுக்கவேண்டுமென்று மனதில் நினைத்தவுடன், அங்கு தங்கக்கிண்ணத்தில் தைலம் இருக்கும். அவர் அதை எடுத்துக்கொடுக்க நின்ற பிராம்மணர் வாங்கி, லிங்கத்திற்கு தைலகாப்பணிந்து அபிஷேகம் செய்து முடிப்பார். பிறகு தேவலோகத்திலுள்ள காமதேனுவின்பாலே தங்கக் குடத்தில் எடுத்துகொடுப்பதாய் மனதில் நினைத்தவுடன், பால் அங்கு தங்ககுடத்திலிருக்கும். அதை அந்தப் பிராம்மணர் எடுத்து அபிஷேகம் செய்ய நின்ற பிராம்மணரிடம் கொடுப்பார். அவர் அதை வாங்கி ஸ்ரீ ஏகாம்பரநாதர் சிரசில் மிகவும் நிதானமாய் இரண்டு நிமிஷங்கள் வரையில் கொட்டிக்கொண்டே இருப்பார். அப்போது ஸ்ரீ ஏகாம்பரநாதர் காமதேனுவின்பாலால் மூடப்படுவார். அது முடிந்தவுடன் திருக்குளத்திலுள்ள கங்கையால் அபிஷேகம் செய்யவேண்டுமென்று மனதில் நினைத்தவுடன் அக்கங்கை அங்கு தங்கக்குடத்தில் இருக்கும். அதை, அப்பிராம்மணர் எடுத்துக் கொடுத்தவுடன் அபிஷேகம்செய்யும் பிராம்மணர் பெற்று, ஸ்ரீ ஏகாம்பரநாதர் சிரசில் கொட்ட, அக்கங்கை லிங்க ஆவடையார்களிலுள்ள பால் யாவையும் எடுத்துக்கொண்டுபோய், சுவற்றிற்கு வெளியிலிருக்கும் தொட்டியில் தங்க சிங்கவாயின் வழியாய்க்கொண்டுபோய் சேர்ப்பிக்கும். அதுபோல்

தயிர் நெய் தேன் இளநீர் பஞ்சாம்ருதம் சந்தனம் பன்னீர் முதலானவைகளினுல் அபிஷேகம்செய்ய மனதில் நினைத்தவுடன், அவர்கள் அதுபோல் செய்வார்கள். அப்போது அடியேன் ஈசுவரருக்கு எதிரில், உள்முகமாய் மனக்கையைக் குவித்து நின்று ஒவ்வொரு அபிஷேகமும் மிகவும் பக்தியுடன் பார்ப்பதுண்டு. பிறகு, லிங்கம் ஆவடையார் இவைகளை மிகவும் உயர்ந்த வெண்மை பட்டுப் பீதாம்பரத்தினுல் ஒற்ற நினைத்தவுடன், அவர்கள் அதுபோல் செய்வார்கள். பிறகு இருபதுமுழம் நீளம் மூன்று முழம் அகலமுள்ள ஓர் உயர்ந்த வெண்மை பீதாம்பரம் ஆவடையாருக்குச் சாற்ற மனதில் நினைத்தமாத்திரத்தில் அவர்கள் அதுபோல் சாற்றி முடிந்தவுடன் மூன்று இழைகளையுடைய மாணிக்கயிழைத்த தங்கபூணூல் தரிக்கும்படி நினைத்து சிரசின்மேல் மிகவும் உயர்ந்த ரோஜா புஷ்பம் சாற்ற சங்கல்பித்த மாத்திரத்தில் அப்பிராம்மணர் அதுபோல் செய்வார். ஸ்ரீ ஏகாம்பரநாதரை மானஸ பூஜையில் அலங்கரித்த பூணூல் ரோஜா புஷ்பங்களை பார்க்கவேண்டுமானுல், ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில் மனோலயத்தால் சகலமும் சித்தியடைதல் சஞ்சித பிராரப்த ஆகாம்ய கர்மங்கள் என்பதில் காட்டியிருக்கும் ஸ்ரீ ஏகாம்பரநாதர் படத்தில் காணலாம். யாம் இவ்வாறு மானஸ பூஜை செய்துவந்தபடியால் அடியேனுடைய உபாசன மூர்த்தியாகிய ஸ்ரீ ஏகாம்பரநாதரை அடியேன் எழுதிய நூலில் காட்ட நேரிட்டது. இவ்வாறு அலங்கரித்தபின் நந்தவனத்தில் எடுத்து வைத்திருக்கும் வில்ப புஷ்பக் குடலை மூவர் கொண்டுவரவேண்டுமென்று மனதில் நினைத்தவுடன் அவர்கள் அதுபோல் கொண்டு வந்து வைத்தபின் மறுபடியும் வில்வக்குடலை கொண்டுவர நந்தவனத்திற்குப்போகும்படி மனதில் நினைத்தவுடன் அவர்

கள் அதுபோல் சென்றுவிடுவார்கள்: பிறகு அர்ச்சகர் வில்வக்குடலை இடதுகையில் பிடித்து வலதுகையால் வில்வமெடுத்து அர்ச்சனை செய்யும்பாவனையாய் மனதில் நினைத்தமாத்திரத்தில் அவர் அதுபோல்செய்து வில்வம் முடியும் சமயத்தில் மறுபடியும் நந்தவனத்திலிருக்கும் புஷ்பக் குடல்களைக் கொண்டுவர மனதில் நினைத்தவுடன் நந்தவனத்திலுள்ள மூவரும் மிகவும் சீக்கிரமாய் புஷ்பக்குடல்களைக்கொண்டுவருவார்கள். பிறகு அர்சனை முடிவதற்குள் நந்தவனத்திலிருந்துவந்த மூன்று பிராமணர்களையும், மடப்பளியிலுள்ள ஐந்து பிராம்மணர்களையும் வினியோகம் கொண்டுவரவேண்டுமென்று மனதில் நினைத்தவுடன் அவர்கள் யாவரும் அதுபோல் மிகவும் சீக்கிரமாய் வினியோகம் கொண்டுவந்து, மூலஸ்தானத்தில் அமைத்துவைத்த தங்கப்பலகையின்மீது வைத்துவிடுவார்கள். பிறகு குருக்கள் அர்ச்சனையை முடித்தபின் மற்ற பிராம்மணர், சற்கரைப் பொங்கல் வெண்பொங்கல் மிளகுபொங்கல் கதம்பம் புளியோரை தத்யோதனம் தேன்குழல் அப்பம் வடை நெய்தோசை புட்டு நெய்யப்பம் பாயசம் முதலானவைகளுள்ள தங்கத் தட்டு தங்கக்கிண்ணங்களை ஒவ்வொன்றாய் எடுத்துக் கொடுக்கும்படி மனதில் நினைத்தமாத்திரம், அப்பிராம்மணர் அதுபோல் எடுத்து குருக்களிடம் கொடுப்பார். அவர் அதைவாங்கி இடதுகையில் தட்டைப்பிடித்து மஹா வினியோகம் ஈசுவரன் ஆக்ரஹிக்கும்படி (இழுக்கும்படி) வலது கையால் காட்டுவார். பிறகு மல்கோவா பேணிஷா தில்பசந்து காதர்பசந்து செவ்வாழை பேவாழை பச்சை வாழைபலா சாத்துக்குடி கமலா அத்தி மாதளம் முதலாகிய பழதினுசுகள் வெவ்வேறாயுள்ள தங்கத்தட்டுகளை எடுத்துக் கொடுக்க மற்ற பிராம்மணர் அதைவாங்கி வினியோகம்

காட்டுவார். பிறகு சீனிக் கற்கண்டுடன் ஏடுபடிய காய்ச்சிய காமதேனுவின் தயிர், கற்கண்டுவாசனைகளுடன் கலந்த வெண்ணை முதலானவைகளை ஆராதித்து முடிந்தவுடன் மூன்று நவரத்தினங்களிழைத்த வட்டில்களில் உள்ள தீர்த்தம் தங்க உத்தாணியால் எடுத்து அதை பகவான் ஆவாஹனம் செய்யும்படி காட்டி முடிந்தவுடன் தூபதீப ஆராதனைகளை முடித்து பிறகு அடியேனுக்கு விபூதிகொடுத்து சிறிது பிரசாதங்கள் தங்கத்தட்டில் வைத்து அடியேனுக்குத் தந்து மிகுதி பிரசாதங்களை பத்துப் பிராம்மணர்களும் பெற்று தங்கக்கதவைச்சாற்றி தாள்போட்டு சாவியை அடியேனிடம் கொடுத்து அவர்கள் இருப்பிடம் போய்ச்சேரவேண்டு மென்று மனதில் நினைத்தவுடன் அவர்கள் அதுபோல் செய்து சாவியை அடியேனிடம் கொடுத்துச் சென்று விடுவார்கள். பிறகு அடியேனுக்குக் கொடுத்த பிரசாதம் திருக்குளத்தினிடம் கொண்டுபோய் படியின் மீது உட்கார்ந்து சிறிது புஜித்து தீர்த்தம்சாப்பிட்டு மிகுதி பிரசாதம் அடியேனுடைய தாயிற்குக் கொண்டுபோய்க் கொடுப்பதாய் நினைப்பதுண்டு.

முன் மணையின்மீது உட்கார்ந்து கண்களை மூடினது முதல் குளத்துப்படியில் உட்கார்ந்து பிரசாதம் சாப்பிட்டு வெளிவரும் வரையில் கண்களைத் திறப்பதில்லை. பிறகு கண்களைத்திறந்து அறையிலிருந்து வெளிவந்து போஜனமுண்டு அடியேனுடைய காரியங்களைப் பார்ப்பதுண்டு. பிறகு மாலையில் பூஜை அறைக்குள் சென்று கதவைத் தாள்போட்டு மணையின்மீது உட்கார்ந்து சின்முத்திரையைப் பிடித்து கண்களை மூடி முன் பிராம்மணர்களை மனதில் நினைத்தவுடன் அவர்கள் உடனே எதிரில்வந்து நிற்பார்கள். அப்போது குருக்களிடம் கோவில் சாவியைக் கொடுக்க அவர்

அதைப்பெற்று திவ்யமான வெங்கல மணிகளையுடைய தங் கக்கதவை திறப்பார். திறந்தவுடன் அது 'கல்' என்னும் சப்தத்துடன் கேழ்கும். திறந்தபின் ஐந்து பிராம்மணர் கள் மடப்பள்ளிக்குச்சென்று தளிகை செய்யவேண்டு மென்று நினைத்தமாத்திரத்தில் அவர்கள் அதுபோல் மடப் பள்ளிக்குச்சென்று தளிகை செய்ய ஆரம்பிப்பார்கள். மற்ற ஐந்து பிராம்மணர்கள், காலையில் அர்ச்சனை செய்த வில்வ புஷ்பங்களை யெல்லாம் களைந்து எடுத்து தங்கக்கூடை களில் கொண்டுபோய் வெளியில் சேர்த்து மூலஸ்தானம் சுத்திசெய்ய வேண்டுமென்று மனதில் நினைத்த மாத்திரத் தில் அவர்கள் அதுபோல் செய்வார்கள். இவையெல்லாம் முடிந்தவுடன் மூவர் வில்வமெடுக்க நந்தவனத்திற்குப் போக வேண்டுமென்று மனதில் நினைத்தவுடன் அவர்கள் அது போல் நந்த வனத்திற்குச் சென்றுவிடுவார்கள். மற்ற இருவர்களை ஸ்ரீ ஏகாம்பரீசுவரர் மீதிருக்கும் ஆடை ஆபர ணங்களைக் களையும் பாவனையாய் மனதில் நினைத்தமாத்தி ரத்தில் அங்கு அதுபோல் செய்வார்கள்: காலை எவரெவர் களுக்கு என்னென்ன கட்டளையிட்டோமோ அதுபோல் அவர்களைக்கொண்டு பன்னிரண்டு வருடங்கள் காலை மாலை களில் தவறாமல் மானஸ பூஜை நடத்திவந்தது. இப்படிப் பட்ட திவ்யமான மானஸ பூஜையை விட்டுத் திருப்பதி மலைக்குச்சென்று மூலஸ்தானத்திலிருக்கும் கோவிந்தனைச் சேவிக்கப்போகும்போது வாசற்படியினிடம் பணம் பறிக் கப் பெரும் புலிபோல் காத்திருக்கும் ஜீவகாருண்யமில் லாத குரூரமான மிருகபுத்தியுடைய சேவகன் கையிலிருக் கும் தோலால் மண்டை பிளக்கும்படி அடிபட்டு ஓட வேண்டியதேன். உலகத்திலுள்ள ஜனங்களை யெல்லாம் இழுக்கும்படியான சக்தி அந்த திருப்பதிமலை கோவிந்த

னுக்கு எங்கிருந்து உண்டாயிற்றென்றால், ஆதி சங்காசாரி யார் மானிடஜனங்களை யெல்லாம் ஆகர்ஷிக்கும்(இழுக்கும்) படியான சக்கிரம் தங்கத்தகட்டில் எழுதி அந்த கோவிந் தன் கீழ் வைத்து அஷ்டபந்தனம் செய்தபடியால் அந்தச் சக்கிரத்தின் மகிமையால் ஜனங்களை திருப்பதி மலைக்கு இழுக்கின்றது. கோவிந்தன் கீழிருக்கும் சக்காம் யெடுத்து மற்றோர் விக்கிரகத்தின் கீழ்வைத்தால் அதன் மகிமை அந்த விக்கிரகத்தினிடம் நடக்குமேயொழிய திருப்பதி கோவிந்தனிடம் நடக்கமாட்டாது. முன் ஆசிர மத்தில் அடியேனுடைய பந்துக்களில் யாவரேனும் அடி யேனை பலவந்தமாய் கோவில்களுக்கு அழைத்துச் சென்று அங்குள்ள விக்கிரகங்களுக்குக் கர்பூர ஆராதனை செய்வித்த போதிலும் அந்த பகவான் ரூபத்தைப்பாராமல் கண்களை மூடி அடியேன் இருதயத்திலிருக்கும் ஸ்ரீ ஏகாம்பரநாதரை மனக்கண்ணால் பார்த்து மனக்கையால் கும்பிடுவது வழக்கம். பிரிதிவி அப்பு தேயு வாயு ஆகாசமென்னும் பஞ்சபூதங்களி னால் உண்டாகிய அடியேனுடைய கையைக்குவித்துக் கும் பிடுவதில்லை. முன்சொல்லியதுபோல் பன்னிரெண்டு வரு டங்கள் மானஸ பூஜைசெய்து முடிந்தவுடன் பதின்மூன்றாம் வருடம் ஓர் பெரியவர் அடியேன் கிரகத்திற்குவந்து, குதிரை பூட்டாத அடியேனுடைய கோச்சு வண்டியில் அவர் ஏறி, அடியேனை வண்டிக்குள் வரும்படிக் கூப்பிட் டார்: அடியேன் வண்டிக்குள் சென்றவுடன் வண்டி ஜன் னல் கதவுகளையெல்லாம் அவர் சாற்றி "நீ என்னசெய்கின் றாய்" என்று கேட்டனர். "வியாபாரம் செய்கின்றேன்" என்று சொல்ல "நான் அதை கேட்கவில்லை. நீ எந்த தேவதையைப் பூஜை செய்து வருகின்றாய்" என்று கேட் டனர். அப்போது, பன்னிரெண்டுவருடங்களாய்ச் செய்து

வந்த முன்சொல்லிய மானஸ பூஜை யாவும் அவரிடம் சொல்ல, அதற்கு அவர் திடுக்கிட்டு மிகவும் ஆச்சர்யப்பட்டு மூக்கின்மீது ஆள்காட்டும் விரலை வைத்து புன்சிறிப்பாய் சிரித்து "நீ பூர்வ ஜன்மத்தில் நல்ல புண்ணியம் செய்தவனாதலால் யாருக்கும் தெரியவராத இவ்வித ஈசுவரபக்தி செய்ய தனக்குத்தானாகவே உதித்தது. நீ இரண்டு படிகளைக்கடந்தாய் இப்போது உனக்கு யோகசாதனமாகிய மூன்றாம் படியை உபதேசிக்கின்றேன். அதுபோல் செய்து வருவாயாகில் நான்காம்படியாகிய ஞானவீட்டை அடைவாய்" என்று சொல்லி உடல் பொருள் ஆவி இம்மூன்றும் தத்தம் செய்துகொண்டு அஸ்தமஸ்தக ஸய்யோகம்செய்து வலது இடது நாசிகளிலும் இரண்டு நாசியிலும் ரேசக பூரக கும்பகங்களைச் செய்துக்காட்டி அதைப்போல் அடியேனையும் செய்யச்சொல்லி பத்து நிமிஷத்திற்குள் பிராணாயாமம் செய்ய கற்றுக்கொடுத்து "இதுபோல் நீ காலை பகல் மாலைகளில் செய்துவரவேண்டுமே யொழிய, முன் மானஸ பூஜையாய்ச் செய்துவந்த ஏகாம்பரனை பூஜை செய்யவேண்டாம். இந்த ரேசக பூரக கும்பகங்களே பிராணாயாமமென்று சொல்லப்படும். இது, நீ முன் செய்து வந்த மானஸ பூஜையைவிட மிகவும் சிரேஷ்டமானது. ஆதலால் நீ மானஸ பூஜையை கனவிலும் நினைக்கவேண்டாம்: வலதுநாசியில் ரேசக பூரக கும்பகங்கள் செய்து முடிந்தபின் எந்த எண்ணங்களுமில்லாமல் ஐந்து நிமிஷங்கள் சிரமந்தீர நிஷ்டையில் சும்மாயிருந்து சிரமம் தீர்ந்தபின் இடதுநாசியில் செய்யவேண்டும்" என்று பிராணாயாமம் செய்ய மிகவும் சுருக்கமாய் காட்டிக்கொடுத்து "சுவாசம் கும்பகத்தில் அனேக ஆயிரம் எண்ணும்வரையில் நிறுத்தப் பழகிவருவாயாகில் சிலது வருடங்களுக்கெல்லாம் உனக்கு

யோகம் பழுத்து தானே தானுய் நின்று விடுவாய்: ஆதலால் உனக்கு இன்று பரமஹம்ஸ ஸச்சிதானந்த யோகீசுவரர் என்று ஞானப்பெயர் கொடுத்தோம்.'' என்று சொல்லி தான் போகப் பிரயத்தினப்பட்டார். அப்போது நீங்கள் எந்த பாம்பரையில் சேர்ந்தவர்கள். உமது நாமதேய மென்னவென்று கேட்டதற்கு "நமது பாம்பரையோ வெட்டவெளி பரம்பரை ; இவனது நாமதேயமோ நித்யா னந்தனென்று சொல்லுவார்கள்'' என்று சொல்லி உடனே வண்டியிலிருந்து எழுந்து கதவைத்திறந்து தாம் நடக்க ஆரம்பித்தார். அவரை அங்கு சற்று தங்கச்செய்து வீட் டிற்குள்சென்று குருக்காணிக்கை கொடுக்க துகை கொண்டுவந்து குருதக்ஷிணை பெற்றுக்கொள்ளவேண்டு மென்று கை நீட்டியவுடன் அவர் அதை பெற்றுக் கொள்ளாமல்,

" அப்பா ! குருக்களில் காரிய குரு காரண குரு என இரண்டு குருக்களுண்டு ; காரிய குரு எப்படிப்பட்டவ னென்ருல், அங்கங்கு சென்று எதையோ ஓர் மந்திரம் உப தேசித்து காணிக்கைப்பெற்றுச் சென்று மறுபடியும் பிரதி வருஷம் அவர்களிடம் சென்று குடும்ப க்ஷேமலாபங்களை விசாரித்து இரண்டொருநாள் அவர்களிடம் இருந்து காணிக்கைப்பெற்றுச் செல்வதுண்டு.

பாரப்பா சீஷர்களை யழைப்பான்பாவி
பணம்பரிக்க வுபதேசம் பகர்வோமென்பான்
ஆரப்பா பிரம்மநிலை காட்டாமற்ருன்
ஆகாசப் பொய்களையு மவன்தான் சொல்வான்
நேரப்பா சீஷனுக்குப் பாவமாச்சு
நிஷ்டைசொல்லுங் குருக்களுக்குத் தோஷமாச்சு
வீரப்பா அடங்குகின்ற இடத்தைப்பாரான்
விதிபோலே முடிந்ததென்று விளம்புவானே.

காரணகுருவோ அப்படிபட்டவனல்ல; பரி பக்குவ மடைந்த ஜீவர்கள் எங்கெங்கிருக்கின்றார்களோ அங்கங்கு சென்று அவர்களிடம் யாதொரு காணிக்கையும் பெறா மலும் மறுபடியும் அவர்களிடம் வாமலும் சென்று விடு வார்கள். உபதேசம் செய்து காணிக்கைப்பெற்றால் ஈசுவரனை விற்பனை செய்தவர்களாவார்கள். உனக்கு உப தேசம் செய்ய வந்ததேயொழிய ஈசுவரனை விற்பனை செய்து போவதற்கல்ல வென்று சொல்லி பிக்ஷையும் எடுத்துக்கொள்ளாமல் சென்று விட்டார். அவரை அந் நாள் முதல் இந்நாள் வரையில் கண்டிலேன்.

இவர் ரேசக பூரக கும்பங்களை உபதேசித்துச் சென்ற பிறகு அதை அப்பியசிக்க அறைக்குள் சென்று ஆசனத் தின் மீதுட்கார்ந்து கண்களை மூடினவுடன் ஸ்ரீ ஏகாம்ப ரேஸ்வரரை அடியேன் மனதில், நினையாமுன்னமே வந்து இருதயத்தில் நின்றுவிடுவார். அப்போது, ஐயோ! இவரை பன்னிரெண்டு வருடங்களாய்ப் பூஜித்து வந்து இப்பொழுது பூஜிக்காமல் எப்படி விட்டுவிடலாமென்று நினைத்து மானஸ பூஜை மிகவும் சுருக்காய் முடித்துவிடலா மென்று நினைத்து அதுபோல் சீக்கிரம்முடித்துப் பிறகு ரேசக பூரக கும்பகங்களைச் செய்வதுண்டு. பிராணயாமம் செய்யக் கண்களை மூடினவுடன், ஸ்ரீ ஏகாம்பரநாதரை நினையாமுன்னமே இருதயத்தில் வந்து நின்று, பிராணு யாமம் செய்யவிடாமல் ஒரு வருஷகாலம் வரையில் தொந் தரவைக்கொடுத்து பிறகு மறைந்துவிட்டார். பிராணுயா மம் உபதேசம் பெற்ற பிறகு மானஸ பூஜை எவ்வளவு சீக் கிரம் செய்து முடித்தபோதிலும் ஒருமணிநேரம் செல் லும். இப்படிப்பட்ட பூஜை வேளையில் மனம் வெளியில் ஓட அவகாச மிருக்குமா? அதை நீங்களே யோசித்துப்

பாருங்கள். ஸ்ரீ ஏகாம்பரநாதர் மறைந்தபின் யோகாப்பியாசம் செய்யும்போது சுவாசம் வெளிவிடாமல் கர்ப்பத்தில் அதிகநேரம் நிறுத்தப் பழகிவந்தபோது பட்ட கஷ்டங்களை எல்லாம் ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில் இந்நூலாசிரியருக்கு உண்டாகிய தேகபாதை என்னும் அத்தியாயத்தில் பார்க்கலாம். ஸ்ரீ ஏகாம்பரேசுவரர், இந்நூலாசிரியனுக்கு பால்யத்தில் உபாசனமூர்த்தியாய் இருந்தபடியால், சில்பியை சென்னையிலிருந்து காஞ்சிபுரம் அழைத்துச் சென்று ஸ்ரீ ஏகாம்பரநாதரைக்காட்டி அவ்வுருவம்போல் லிங்கம் செய்வித்து அதை படம் பிடித்து இந்நூலில் காட்டியிருக்கின்றது. இந்த லிங்கம் கடப்பையில் அடியேனுடைய ஆசிரமத்தில் நிர்விகல்ப ஸமாதி நிஷ்டை செய்யும் குஹை ஸமீபமாய் வைக்கப்பட்டிருக்கின்றது

மாயையால் மூடப்பட்ட அடியேனுடைய ஜீவன் பூர்வஜன்மத்தில் கிரீஸ்து சரீரமெடுத்து ஏசுநாதர் ஒருவரே இருக்கின்றார் என்று அங்கங்குச் சென்று உபந்நியாசம் செய்து வந்ததனால் அந்த ஜன்ம வாசனையினால், இந்த ஜன்மத்தில் பன்னிரெண்டு வயது முதல் ஒரே கடவுளைத் தியானித்து வந்து யோகசித்திபெற்று பகவான் ஒருவனே அனேக ரூபங்களை எடுக்கின்றாரென்று ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில் "சம்சாரவாசனை வாசனாத்திரயங்கள்" என்பதில் உபநிஷத்து, பகவத்கீதை இவைகளினால் திருஷ்டாந்தமாய் எடுத்துக் காட்டப்பட்டிருக்கின்றது. ஆதலால் இந்த ஜீவன் பூர்வஜன்மத்தில் கிரீஸ்து சரீரத்தையும் இந்த ஜன்மத்தில் துளுவவேளாள சரீரத்தையும் அடைந்திருக்கின்றது. இனி யாம் நிர்விகல்ப சமாதி நிஷ்டை செய்ய செல்லப்போகும் குஹை வாசற்படி

இரண்டு பக்கங்களிலும், ஐந்தடி உயரத்தில் சிவ விஷ்ணு ரூபங்களுடன் இரண்டு துவாரபாலகர்களையும், மேற்படி குஹை வாசற்படிக்குமேல் மகம்மதியர்களுக்கு கடவுளாயிருக்கும் மூண்ரும்பிறை சந்திரனேயும், கிரீஸ்துவர்களுக்கு கடவுளாயிருக்கும் ஏசுநாதரையும், சிலேகளால் செய்து வைக்கப்படும்; குஹைக்கு வலதுகைப்புறமாய் ஸ்ரீ ஏகாம்பரேசுவரரை எழுந்தருளச் செய்யப்படும். பூர்வ ஜன்மத்தில் அடியேன் கிரீஸ்து ஜன்மமெடுத்ததை யோகதிருஷ்டியில் பார்த்தபோதிலும் அதை வெளியிடலாகாதென்பதற்கு யோகதத்வோபநிஷத் இங்கு திருஷ்டாந்தமாய் எடுத்துச் சொல்லுகின்ரும்.

யோகதத்வோபநிஷத்.

"யாமமாத்ரம் ப்ரதிதிநம் யோகீ யத்நாததந்த்ரிதః
யதா வா சித்த ஸாமர்த்யம் ஜாயதே யோகிநோ த்ருவம்."

யோகியானவன் சோம்பலில்லாமல் பிரதி தினம் சுவாசம் ஒரு நாழிகை வெளிவிடாமல் நிறுத்தினுல் அவனுக்கு அனேக சாமர்த்தியங்கள் உண்டாகும் அன்றியும்,

"தூரஸ்ருதிர் தூரத்ருஷ்டிః க்ஷணாத் தூரகமஸ்ததா
வாக்ஸித்திః காமரூபத்வ மத்ருஸ்யகாரணீ ததா
மலமூத்ரப்ரலேபேந லோஹாதேః ஸ்வர்ணதாபவேத்
கே கதிஸ்தஸ்ய ஜாயேத ஸந்ததாப்யாஸயோகதః".

தூரத்திலுள்ள சப்தங்களைக்கேட்கவும் வஸ்துக்களைப் பார்க்கவும் க்ஷணத்திற்குள் தூரபிரயாணம் செல்லவும் இஷ்டமான ரூபங்களைத்தரிக்கவும் தன்னை இதரர்கள் அறிந்துக் கொள்ளக்கூடாத சக்தியும் உண்டாகும். இப்படிப்பட்ட யோகியினுடைய மல மூத்திரங்களை இரும்பில் பூசினுல் தங்கமாகும். எப்பொழுதும் யோகாப்பியாசம்

செய்துக்கொண்டிருக்கப்பட்டவனுக்கு ஆகாசத்தில் சஞ்ச ரிக்கும் சக்தியும் உண்டாகும்.

"ஸதா புத்திமதா பாவ்யம் யோகிநா யோகஸித்தயே
ஏதே விக்நா மஹாஸித்தேஃ ந ரமேத் தேஷு புத்திமாந்."

யோகியானவன் தனக்கு யோகம் சித்திக்குமென்னும் எண்ணத்தினுல் பிரதிதினம் யோகாப்பியாசம் செய்து வர வேண்டும். யோகாப்பியாசம் சித்தியானபிறகு முன் சொல்லிய தூர சிரவண முதலாகிய ஸித்திகளெல்லாம் பரமாத்மா சம்பந்தத்திற்கு (யோகசித்திக்கு) விக்கினங்கள். ஆதலால், புத்திமான்கள் அப்படிப்பட்ட விஷயங்களில் இச்சை வைக்கலாகாது.

---

# இந் நூலாசிரியர் பூர்வஜன்மம்.

அப்படி யோகத்திற்கு விக்கினங்கள் உண்டான போதிலும் அடியேன் சமாதி (நிஷ்டை)யில் தோன்றிய அனேக தேவ ரகஸ்யங்களில் ஒன்றை இப்போது உங்களுக்கு வெளியிட்டுச் சொல்லுகின்றோம் கேளுங்கள். அடியேன் பன்னிரெண்டு வருடங்கள் மானஸ பூஜை செய்து முடித்து யோகாப்பியாசம் உபதேசம் பெற்ற போது அடியேனுடைய யோக குருவானவர் என்ன சொல்லினரென்றால், நீ சிலவருடங்கள் யோகாப்பியாசம் செய்துவந்தால் பிறகு அந்த யோகம் பழுத்து தானே தானாய் நின்றுவிடுவாய். அப்போது மான் தோல்மீது பத்மாசனத்துடன் உட்கார்ந்து பிராணாயாமம் செய்ய ஆரம்பிப்பதற்கு முன் கண்களைமூடி இரண்டுகைகளையும் குவித்து உனது குருவை நமஸ்கரித்து துதிசெய்து முடிந்தவுடன், ஸகுண நிர்குணரூபமுடைய பரப்பிரம்மமே, இந்த ஜீவன் சென்ற ஜனனம் எந்த ரூபம் அடைந்திருந்ததோ அந்தரூபம் அடியேனுக்கு தரிசனம் தரவேண்டுமென்று, பரப்பிரம்மத்தை துதிசெய்து முடிந்தவுடன் பிராணாயாமம் செய்துமுடித்து, நிஷ்டையிலிருக்கவேண்டும். அப்போது உனக்குத் தோன்றும் ஆகாயவடிவத்தில் சிலது நாள்களுக்குள் உன் பூர்வஜன்மம் அங்கு காணப்படும் என்று சொல்லினர். குருநாதன் சொல்லியதுபோல் சிலகாலம் யோகாப்பியாசம் செய்துவந்து பிறகு ஒருநாள் பிராணாயாமம் செய்ய ஆசனத்தின்மீது உட்கார்ந்து கண்களைமூடி குருவை துதிசெய்து முடிந்தபின், ஸகுண நிர்குண ரூபமுடைய பரப்பிரம்மமே இந்த ஜீவன் சென்ற ஜனனம் எந்தரூபம்

அடைந்திருந்ததோ அந்த ரூபம் அடியேன் தரிசிக்கும்படி அனுக்கிரகம் செய்யவேண்டும் என்று பாபபிரம்மத்தைத் துதிசெய்து முடித்து பிராணயாமம்செய்து நிஷ்டையிலிருந்தோம். அப்போது அங்கு தோன்றிய ஆகாயத்தில் ஒன்றும் காணப்படவில்லை. இவ்வாறு இருபதுதினங்கள் துதிசெய்தும் நிஷ்டையில் தோன்றிய ஆகாயத்தில் ஒன்றும் காணப்படவில்லை. பிறகு இருபத்தோரும்நாள் ஆசனத்தின்மீதுட்கார்ந்து பிராணயாமம் ஆரம்பிப்பதற்குமுன் கண்களைமூடி குருவை துதிசெய்து பிறகு, என் ஆண்டவனே அடியேனுடைய பூர்வஜன்மம் இதுவரையில் காட்டாமலிருப்பதற்காக என்ன பாப கருமங்களைச் செய்தேனோ தெரியவில்லையே என்று மிகவும் மனம் நொந்து பகவானுக்குக் கருணை உண்டாகும்படி கெஞ்சிக் கேட்டுப் பிராணயாமம் செய்துமுடித்து நிஷ்டையிலிருக்கும்போது அன்று இரவு தோன்றிய ஆகாய வடிவத்தில், அடியேன் நாற்பது வயதும், கறுத்த நிறமும், கல்மீசையும், தூலசரீரமும், ஐந்தரையடி உயரமுள்ளவனும், பூட்சு (Boots), வெள்ளை நிஜார், வெள்ளை லாங்கோட்டு, வெள்ளைத்தலப்பாகையுடன் இருந்து இரண்டு சிறிய பைபில்களை கையில் பிடித்து அங்கங்குசென்று ஏசுநாதர் ஒருவரே இருக்கின்றார் என்று ஜனங்களுக்கு உபதேசம்செய்து முடிந்தவுடன் வீட்டிற்கு வந்தோம். அந்த வீடு கிழக்குமேற்காய் இரண்டடி உயரத்தில் கட்டியிருந்தது. தெருவாசற்படியினிடம் ஆறடி அகலமும் முப்பதடி நீளமுமுள்ள ஓட்டுத்தாழ்வாரமும் தாழ்வாரத்திற்கு மூன்றடி உயரமுள்ள கைப்பிடிச்சுவர் கட்டியிருந்தது. அவ்வீட்டிற்குள் செல்ல வெளியில் நான்கு படிகளும் இருந்தன. அதை ஏறி உட்சென்றவுடன் ஒரு நடையும் நடையைக்கடந்து சென்றவுடன் எட்

டடி சதுரமுள்ள வாசலும் வாசல் நான்குபுறம் ஆறடி அகல முள்ள ஓட்டுத் தாழ்வாரங்களும் தாழ்வாரத்திற்கு வடக் குத் தெற்குப்புறமாய் ஓட்டால் மூடிய பத்தடி அகலமும் பதினறடி நீளமுள்ள இரண்டு கூடமும் ஒவ்வொரு கூடத் தில் கிழக்குமேற்காய் இரண்டு அறைகளுமிருந்தன. பின் புறம் சமயல் அறை யிருந்தது அதைப்பார்க்கவில்லை. தெற்குப் புரமா யிருக்கும் கூடத்தில் இரண்டு அறைகளை யுடைய ஒரு சிறிய மேஜையும் நாற்காலியும் இருந்தன. உபதேசியாயிருந்த அடியேன் வெளியில் உபதேசம்செய்து வீடுசேர்ந்து மேஜையிருக்கும் கூடத்தினிடம்சென்று வலது புறமாயிருக்கும் மேஜை அறையைத் திறந்து, கையி லிருந்த இறண்டு சிறிய பைபில்களை வைத்து, அறையை மூடி வாசல் தாழ்வாரத் தூண் சமீபமாய் வந்து உபதேசி நின்றுன். அப்போது அந்த சரீரத்திற்கு பத்னியாயிருந் தவள் சமையல் வீட்டிற்குள்ளிருந்துவந்தாள். அவ்வம் மையார் வயது முப்பது இருக்கலாம். உயரம் ஐந்தடி கறுத்தநிறம், குண்டு மூஞ்சி, ரவை மூக்குத்தி, ரவைக்கம் மலுடன் ஜொலித்து முகம் மிகவும் களையுடையதாய் சிறிது தூல சரீரமாய் இருந்தன. அவ்வம்மை வெள்ளைப் பாவாடை, வெள்ளை ரவிக்கை, வெள்ளை தாவணிகளை வுடுத்தி உபதேசி நின்றிருந்த தூணுக்கு எதிரிலிருக்கும் தூணில் சார்ந்து நின்றிருந்தாள். அப்போது தம்பதிகள் இருவரும், பயாஸ்கோபில் படங்கள் பேசாமல் எப்படி நின்றிருக்குமோ அதுபோல் ஒருவரோடொருவர் பேசா மல் நின்றிருந்தார்கள். ஆறுவயதும், நான்கு வயதுமுடைய இரண்டு சிறுவர்கள் முழங்கால் வரையில் நிஜாரும், காலில் பூட்சும் (Boots) கோட்டும் போட்டுக்கொண் டிருந்தார்கள். அவர்களிருவரும் வந்து தூண் சமீபமாய்

நின்றிருக்கும் உபதேசி காலைக் கட்டிக்கொண்டார்கள். இவ்வாறு சற்று நேரம் தோன்றி பிறகு எல்லாம் மறைந்து விட்டன. நிஷ்டை கலைந்து பார்த்தவுடன் ஒன்று மில்லாமல் இருந்ததால் இதுதான் நமது பூர்வஜன்மமென் றும், அவர்கள் அந்த ஜன்மத்தில் வந்த மனைவி மக்க ளென்றும் தெரிந்துகொண்டோம். ஒவ்வொருவருக்கும், இவ்வாறு தெரிந்துகொள்ள சக்தி யிருந்தபோதிலும், ஆசையென்னும் மாயையால் கட்டுப்பட்டு மனம் சதாகால மும் சலித்துக்கொண்டிருப்பதனால் பூர்வஜன்மமும் உலகத் தில் நடந்தேறிவரும் விஷயங்களும் தெரிந்து கொள்ளாம லிருக்கின்றோம். மனம் வெளியில் ஓடாமல் பரமாத்ம சொரூபத்தில் லயித்தால் எல்லாவற்றையும் அறியலாம்.

அதாவது, நிஷ்டையில் ஏகவெளியாகத் தோன்றும் பரப் பிரம்மத்தில் மனம் ஐக்யமானால் பிரபஞ்சத்திலுள்ள எல்லா விஷயங்களையும் அறியலாம். எப்படி யென்றால் ஒரு டம்ளர்பாலை பெரிய குளத்தில் விட்டவுடன் அது முதல் விழும்போது மிகவும் திக்காய் (கனமாய்) விழுந்து பிறகு அது சிறுகச்சிறுக நிதானமாய்க் கரைந்து பால் குளத் திலுள்ள ஜலத்திலெங்கும் வியாபித்து ஐக்கியமாய்விடும். அப்போது பால் ஜல சொரூபத்தை அடைவதால் குளத் தில் எத்தனைவித மஞ்சங்களும் நத்தைகளும் ஆமைகளும் புழுக்களும் இருக்கின்றனவோ அவைகளை யெல்லாம் அந்தப்பால் அறிகின்றது. அதுபோல் யோகநிஷ்டையில் இருக்கும்போது மனமானது பரப்பிரம்மத்தில் ஐக்ய மானால் பிரபஞ்சத்திலுள்ள எல்லா விஷயங்களையும் அறி யலாம். இதற்கு சுருதிப்பிரமாணம்.

"லவணம் தோய ஸம்ஸ்பர்ஸ்யாத் த்ரவதோயமயம் பவேத்
மனோ ஹி ப்ர்ஹ்ம ஸம்ஸ்பர்ஸ்யாத் ததாப்ரமமயம்பவேத்."

உப்பு ஜலத்தில் போட்டவுடன் அது கரைந்து ஜலமாவதுபோல் மனம் பிரம்மத்தில் கலந்தவுடன் அந்த மனம் பிரம்ம சொரூபமாகின்றது. அம்மனம் அப்படி பிரம்ம சொரூபமானவுடனே மனோமயமாகிய பிரபஞ்சமெல்லாம் பிரம்ம சொரூபமேயாகும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆதலால், பூர்வஜன்மத்தில் கிரீஸ்து சரீரமெடுத்து உபதேசியாயிருந்த அடியேன் இச்சன்மத்தில் துளுவ வேளாள குலத்தில் அவதரித்து பூர்வஜன்ம ரகஸ்யம்தெரிந்துகொள்ள குருவினால் அறிந்து யோக நிஷ்டையிலிருக்கும்போது, முன் ஜன்மத்தில் வந்த பெண்டு பிள்ளைகளெல்லோரும் வெவ்வேறாய் எங்கெந்த ஜன்மங்களை எங்கெங்கெடுத்திருக்கின்றார்களோ தெரியவராது. யோக நிஷ்டைக்குமுன் பூர்வ ஜன்மத்தைக் காட்டும்படி பகவானை வேண்டிக்கொண்டபடியால் முன்ஜன்மத்தில்வந்த பெண்டுபிள்ளைகளின் ரூபங்களை பகவானே எடுத்துக்காட்டினாரேயொழிய பூர்வஜன்ம பெண்டுபிள்ளைகள் பிரத்யக்ஷமாய்க் வந்துக்காட்டினதில்லை. பரமாத்மாவாயிருக்கும் ஈசுவரன் ஆகாய வடிவமாயிருப்பதனால் அவருக்கு யாரிடமும் பேச சக்தியிராது. பேச வேண்டுமானால் அவ்வீசுவரன் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசமென்னும் பஞ்ச பூதங்களையும் ஸமஷ்டி வியஷ்டியாய்ச் செய்து அதை ஒன்றுடன் ஒன்றாய்ச் சேர்த்து நம்மைப்போல் மானிடச்சட்டையைத்தரித்து புருஷனாய் அவதாரம் செய்யவேண்டும். சர்வத்திற்கும் ஈசுவரனாய் இருக்கப்பட்டவன் பேசவேண்டுமானால் கண்கள், மூக்கு, வாய், செவிகள், தேகசர்மம் முதலாகிய பஞ்சேந்திரியங்களும் இருக்கவேண்டும். அவைகள் இல்லாவிடில் பேசமாட்டார். அவர் புருஷனாய் அவதரித்தபோதிலும் நம்மைப்போல்

புருஷனென்று அவரை நினைக்கலாகாது. அவர் மாயைக்குள் உட்பாடதவர் சகலஜீவகோடிகளையும் சமமாய்ப் பார்க்கப்பட்டவர்; ஜீவகாருண்யமும் கருணையும் எல்லோரிடத்தில் தயையும் மிகவும் விசுவாசமும் பூததயை பச்சாதாபமும் கனிகாமுமுடையவராய் பக்தர்களை கடாக்ஷிப்பவருமாய் இருக்கின்றார். இப்படிப்பட்ட குணங்கள் உலகத்தில் எவருக்குண்டோ அவரை ஈசுவரனென்றே சொல்லலாம். ஈசுவரன் இப்படிபபட்ட குணங்களுடையவர்களின் பாததூளியை எடுத்து ஒரு சிறிய தங்க டப்பியில்போட்டு வைத்து அவர் அதை பூஜைசெய்து வருகின்றார் என்று ஸ்ரீ பகவத்கீதையில் சொல்லப்பட்டிருக்கின்றது உலகத்திலுள்ள ஜனங்களெல்லோருக்கும் இப்படிப்பட்ட குணங்கள் இராமல் இதற்கு நேர் விரோதமாயிருந்து தனைசையென்னும் பிசாசினால் பீடிக்கப்பட்டு பிரதிதினம் இரண்டு பொய்யாகிலும் சொல்லி தனத்தைச் சம்பாதித்து பெண்டு பிள்ளைகளுக்கு ஆஸ்தி சேகரித்துவைத்து பிரதிதினம் இருபத்திநாலு மணிநேரத்தில் ஒரு நிமிஷமாகிலும் ஈசுவர தியானத்தில் இராமல் நாள் முழுமையும் அவர்களின் சொந்த வியவகாரங்களிலும் வீண் வியவகாரங்களிலுமிருந்து காலங்கழித்து கிடைக்கத்தகாத மானிட சரீரத்தை பாழ்செய்து கொள்ளுகின்றார்கள். ஆதலால், நாம் ஜனனமெடுத்ததற்கு இறப்புப் பிறப்பு இல்லாமல் செய்துகொள்ளவேண்டும். இறப்பு பிறப்புகளுக்கெல்லாம், ஆசாபாசங்களென்னும் அழுக்கால் மூடப்பட்டிருக்கும் மனதே காரணமாயிருக்கின்றது. அப்படிப்பட்ட ஆசாபாசங்களையெல்லாம் அறுத்துத்தள்ள "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யமே." வஜ்ஜிராயுதம் போன்றதாயிருக்கின்றது. ஆதலால், சம்சார சமுத்திரத்தைக்கடந்து

கடைத்தேரவேண்டு மென்று நினைக்கப்பட்டவர்களுக்கு, "ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யம், ஸ்ரீ கிருஷ்ணர் ஜ்ஞாந ஸம்வாத ரூபமாய் எழுதிய ஸ்ரீ பகவத்கீதை." "ஸ்ரீ கபீர்தாஸ் சரித்திரம்." இம்மூன்று நூல்களே போது மானதாயிருக்கின்றது. இம்மூன்று நூல்களையும், வாசித்த வுடன், பிரபஞ்ச விஷய வியாபாரங்களையும் மனோ விகாரங் களையும் நன்றாய் அறிகின்றார்கள். இவைகளை அறிந்த வுடன் சதாகாலமும் வேதாந்த விசாரணை செய்துவரப்பட் டவர்களெல்லோருக்கும் ஓஹோ! பிரபஞ்ச விஷயம் இவ் வளவுதானென்று சகல விஷயங்களிலிருந்து விரக்தியுண் டாய், எல்லா விசாரங்களையும் விட்டு ஒழித்து மோக்ஷ மென்னும் வீட்டை அடைய ஒவ்வொருவரும் பிரயத்தி னப்படுவார்கள். மேற்படி சுவாமிகளின் பத்நியார் சிவ பதவி அடைந்த பிறகு, சுவாமிகள் கௌபீன வேஷத்து டன் புறப்பட்டு சென்னை வியாசர்பாடியில் புற்றுக்குப் பால் வார்க்கும் தோட்டத்திற்குள் இருந்த ஆசிரமத்தில் போய்ச் சேர்ந்தார்.

அந்த ஆசிரமம் சுவாமிகளின் பத்நியார் இடது கைப் புறமாய்க் காட்டப்பட்டிருக்கின்றது. அங்கு சிலது நாட் கள் தங்கி பிறகு கடப்பை வந்து சேர்ந்தார்கள்; இவர் கிருஹஸ்தாசிரமத்திலிருந்து யோக சித்தியடைந்தபடியால் மானவ ஜனங்களெல்லோரும் சம்சாரத்துடன் இருந்து மோக்ஷபதவியை அடையும்பொருட்டு இந்நூலாசிரியரின் பத்நியாரை இந்நூலில் திருஷ்டாந்தமாய்க் காட்டப்பட் டது. வெளிப் புறப்பட்டபிறகு தம் அநுபவங்களை உப தேசமாய்ச்சொல்ல அந்தந்த சந்தர்ப்பங்களுக்குத் தக்க படி வேண்டுவதுபோல் சுவாமிகளின் படம் பிடித்து ஜீவப் பிரம்மைக்யத்தில் காட்டப்பட்டிருக்கின்றது.

# வேதாந்த உபந்நியாசங்களின் பலன்.

உலகத்திலுள்ள ஜனங்களில் சிலர் சதாகாலமும் புராணங்களையும் காலக்ஷேபங்களையும் கேட்டுக் காலங்கழித்து வருகின்றார்கள். சிலர் மடங்களில் நடந்தேரிவரும் வேதாந்த உபந்நியாசங்களை வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறைகள் கேட்டு காலங்கழித்து வருகின்றார்கள். ஆதலால்,

" அபவர்ஷ ஸஹஸ்ராயுப்ஸ் ஶாஸ்த்ராந்தம் நாதிகச்சதி
விஜ்ஞேயோக்ஷர தன்மாத்ரே ஜீவிதம்சாபி சஞ்சலம்
விஹாய ஶாஸ்த்ரஜாலாநி யத்ஸத்யம் ததுபாஸ்யதாம்."

என்னும் பயிங்கலோபநிஷத் வாக்கியரீதியாய் உலகத்தில் சமுத்திரம்போல் அனேக சாஸ்திரங்கள் அபாரமாயிருக்கின்றன. ஒவ்வொரு மனுஷ்யனும் ஆயிரவருஷங்கள் ஜீவித்திருந்து சாஸ்திரங்களை வாசித்துக் கொண்டிருந்த போதிலும் சாஸ்திரங்கள் சம்பூர்த்தியாகமாட்டா. ஆதலால்,

சுரு || அநுபூதிம் விநா மூடோ வ்ருதா ப்ரஹ்மணி மோததே
ப்ரதிபிம்பித ஶாகாக்ர பலாஸ்வாதன மோதவத்.

சுவாநுபவமில்லாமல் வேதாந்த சாஸ்திர விசாரணையினால் நான் பிரம்மத்தைத் தெரிந்துகொண்டேனென்று சந்தோஷிப்பவன் பயித்தியக்காரனும் மூடனுமேயாம். இப்படிப்பட்டவன் ஓர் குளத்தின் ஓரமாயிருக்கும் மாமரத்திலுள்ள கனிகள் குளத்து ஜலத்தில் தோன்றியபோது அதில்காணப்படும் மாங்கனிகளைப்பார்த்து அதைத் தான் புசித்ததாய் எண்ணி சந்தோஷப்பட்டவன்போல் ஆகின்றான். ஆதலால் எத்தனை வருஷங்கள் வேதாந்த சாஸ்திரங்

களை வாசித்தும் கேட்டும் வந்தபோதிலும் குருகடாக்ஷத்தினுல் சுவானுபவம் உண்டாகாவிடில் பிரயோஜனமில்லை. ஆதலால்,

சாஸ்திர விசாரணையைவிட்டு நமது ஜீவிதகாலம் மிகவும் சொற்பமாயும் தாமரை யிலையின்மீதுள்ள ஜலபிந்துவைப்போலும் இருக்கின்றதென்றும் எண்ணி அதிதீவிரப்பட்டு ஓடித்திரியும் மனதை ஓடவிடாமல் நிறுத்துவதற்காக பிரம்ம சூத்திரத்தினுல் (கயிற்றுல்) கட்டி மனதை ஒரே நிலையில் நிறுத்தி, அந்த ஓர் நிலையையும் சூன்னியமாக்கிப் பிறகு தன்னைத்தான் மறந்து பிரம்மானந்த சுகமடைவதற்காக அனேக குரு ரகஸ்யங்கள் யாவும் ஜீவப் பிரமமைக்யத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. அதை அறிந்து அதுபோல் சுவானுப்வத்திற்குக் கொண்டுவரவேண்டும். இனி சுாவமிகள் நிர்விகல்ப சமாதிநிஷ்டைசெய்ய சீக்கிரம் குகைக்குள் சென்றுவிடப்போகிறபடியால் முன்பதிப்பில் சொல்லிய உபதேசம் முதலானவைகளை நிவர்த்தி செய்யப்பட்டது.

---

## துன்மார்க்க குணங்களைப் போக்கடிக்கத்தக்க உபதேசங்கள்.

அர்த்தா க்ருஹே நிவர்த்தந்தே ஶ்மஶானே மித்ரபாந்தவாஹ:
ஸுக்ருதம் துஷ்க்ருதம் சைவ கஸ்ச்சந்த மநுகஸ்ச்சதி.

திரவ்வியமும், வீடும் சம்பாதித்து தர்மம் செய்யாமல் இருந்தால், மரண மடையும்போது அந்த திரவ்வியம் வீட்டில் இருக்குமேயொழிய தன்னுடன்கூட வரமாட்டா. புத்திரர்களும், பந்துக்களும் சினேகிதர்களும் சுடலைமட்டும் வந்து தீ மூட்டி சென்று விடுவார்களேயொழிய, தம்முடன்கூடவரமாட்டார்கள். ஆனால் எது வருமென்றால் தம் கைகளால் செய்த புண்ணிய பாபங்கள் இரண்டே தம்முடன்கூட தம் நிழலைப்போல் வந்து, நிஷ்காம்ய புண்ணியம் செய்திருந்தால் யோகிகளின் வீட்டிலும், காம்ய புண்ணியம் செய்திருந்தால் வேதபாராயணம் செய்யும் பிராம்மணர்களின் வீட்டிலாகிலும், அல்லது செல்வமுடையவர்களின் வீட்டிலாகிலும் பிறந்து மறுஜன்மங்களில் மேலான பதவியாகிய மோக்ஷமென்னும் வீட்டை அடைவார்கள். ஆதலால், எப்பொழுதும் ஈசுவரார்ப்பண தர்மங்களையே செய்துக்கொண்டுவரவேண்டும்; பாபம் செய்தவர்கள், தாம் பிறந்திருக்கும் ஜன்மத்தைவிட மிகவும் தாழ்ந்த ஜன்மத்தை அடைந்து கேவல ஹீனமான எண்பத்துநான்கு லக்ஷ ஜீவராசிகளின் யோனிகளில் பிறந்து, நரகத்திற்குப் பாத்திரர்களாவார்கள். ஆதலால், ஸ்திரீ புருஷர்கள், எப்பொழுதும் பாபகார்யங்களைச் செய்யாமல் புண்ணிய காரியங்களையே செய்துகொண்டு வரவேண்டும்.

அநித்யாநி ஶரீராணி விபவோ நைவஶாஶ்வத:
நித்யம் ஸந்நிஹிதோ ம்ருத்யு: கர்த்தவ்யோ தர்மஸங்க்ரஹ:.

சரீரம் அழிந்துபோகத்தக்கது, சம்பத்துக்கள் சாஸ்வதமானதல்ல, தன்னைக்கொண்டுபோக மரணம் எப்பொழுதும் கார்த்துக்கொண்டிருக்கின்றது; ஆதலால், எப்பொழுதும் தர்மத்தையே செய்துகொண்டு வரவேண்டும். தர்மம் செய்வதுமன்றி சத்தியமாயிருக்கவேண்டும்.

ஸத்தியமே ஜயத்தைத் தரத்தக்கது; ஸத்தியமே ஆதாரமாயும் ஜீவனமாயும் இருக்கின்றதென்று நினைக்கப் பட்டவர்கள், நிஜமாய்க் கடைதேரிவிடுவார்கள். எல்லாவற்றிலும் ஸத்தியமே மேலானது. அதன் மதுரத்தை அனுபவித்தே தீரவேண்டும். ஸத்தியத்தைவிட ரக்ஷிக்கப் பட்டது, உலகத்தில் வேறொன்றில்லை. பரிகாசத்திற்காகிலும் கினவிலாகிலும் அஸத்யமாடாமலிருக்கவேண்டும். என்றால் பொய் சொல்லாமல் சத்தியமாயிருக்கவேண்டும். ஸத்யமே பகவத் சொரூபம். ஸத்ய சொரூபனான பகவான் ஸத்ய வாக்யமுடையவர்களுக்கே காணப்படுவான். ஆதலால், பகவானை பூர்ணபக்தியுடன் பூஜைசெய்யவேண்டும். இந்த கலியுகத்திலுள்ள மானவ ஜனங்களுக்கெல்லாம் பக்தி ஒன்றே, மோக்ஷத்தைத் தரத்தக்கதாயிருக்கின்றது. இதரர்கள் மெச்சும்படி தேவதா பூஜை செய்தால், யாதொரு பலனும் கிடைக்கமாட்டா. எண்ணெயில்லாமல் விளக்கு எரியாததுபோல், மனிதர்களுக்கு பகவத் பக்தி இல்லாவிட்டால் மோக்ஷத்தை அடையமாட்டார்கள். பகவானது ஆஞ்ஞைக்கு விரோதமாயிருக்கும், மானவ ஜனங்களின் ஆஞ்ஞைக்கு, எப்பொழுதும் உட்படலாகாது; ஜனங்களில்லாத ஏகாந்தமானயிடத்திற்கு, அப்போதைக்கப்போது சென்று ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில் உபதேசமாய்ச் சொல்லியிருக்கும் ராஜ யோகத்தின் ரஹஸ்யத்தை அறிந்து அதுபோல் ஜபம்

செய்துவரவேண்டும். தைவபக்தியும், பெரியோர்களின் ஸஹவாஸமும் மோக்ஷத்திற்கு முக்கிய சாதனங்கள். மனதிற்கு, எந்த கெட்ட எண்ணங்களும் இல்லாமல், அந்தர்சுத்தியாயிருக்கப்பட்டவன் பகவானை துதிசெய்வானுகில், அவன்மேல் பகவானுக்குக் கருணையுண்டாகும். திருடமாகிய பக்தி விசுவாசங்களையும், நிச்சலமாகிய தியான நிஷ்டையும் உங்களுக்குத் தரவேண்டுமென்று, பகவானை பிரார்த்தனை செய்யுங்கள். அப்போது அவர், உங்கள் இஷ்டம்போல் அனுக்கிரகம் செய்வார். பக்தியினுல் மனம் பரிபக்குவ மடைந்தவனுக்கு, எப்போதாகிலும் ஒருநாள் பகவானது நிஜசொரூபம் காணப்படும். பகவான் மீது திருட பக்தி விசுவாசங்கள் இருந்தால் எப்படிப்பட்ட ஆபத்துகளும் நீங்கிவிடும். பிரபஞ்சத்தில் எவ்வளவு ஆசைகள் உண்டோ அவைகளையெல்லாம் நீக்கி பகவானிடத்தில் அந்த ஆசையை திருப்ப வேண்டும். எல்லா ருசியைவிட பக்திருசியே சிரேஷ்டமானது. பலாபேக்ஷை இல்லாதவனுய் இருந்து, பக்தி சிரத்தையுடன் பகவானை சேவிக்கவேண்டும். பகவானை எந்தரூபமாய் நினைக்கின்றுேமோ, அந்தரூபமாய்த் தரிசனம் கொடுப்பார். எல்லாவற்றிலும் பகவான் இருக்கின்றுர் என்று விசேஷ பக்தியுடன் நினைக்கப்பட்டவர்களுக்கே, நிஜமாகிய பக்தி உண்டாகும். அஞ்ஞானத்தில் மூழ்கி நூறு வருஷங்கள் இருப்பதைவிட ஞானத்துடன் ஒருநாள் யிருந்தால் போதுமானது. பகவான் இங்கு இல்லையென்று நினைத்து, மரவாயிருந்து பாபகார்யங்களைச் செய்யலாகாது ஆத்மசுகத்தை அடைந்த புருஷன், விஷயசுகத்தை விரும்பான். பகவான், நூறுகோடி பெயர்களுடனும் அனேககோடி ரூபங்களுடனும் இருக்கின்றுர். நெருப்பைத் தீண்டுவதற்கு

எவ்வளவு பயமோ அவ்வளவு பயமாய் பாபத்தில் யிருக்கவேண்டும். இவ்வாறிருந்து, பொன்மீது எவ்வளவு பிரீதி வைக்கின்றோமோ அவ்வளவு பிரீதி பகவான்மீது வைக்கவேண்டும். எல்லா எண்ணங்களையும், விஷத்திற்குச் சமானமாய் எண்ணவேண்டும். ஆசை யென்பது, பிசாசைப்போல் இருக்கின்றது. ஆதலால், சகல ஆசையும் விட்டு ஒழிக்கவேண்டும் ஆசையென்னும் வேர், அனேக ஜன்மங்களாய் நம்மைத் தொடர்ந்து வரு வதனால், சம்ஸாரமென்னும் காட்டின் மத்தியில் நம்மைக் கொண்டுவந்து நிறுத்துகின்றது. இந்த சம்ஸார மென்னும் காட்டில், மனைவியே பெரிய வலையாயும், புத்திரர்களே சத்துருக்களாயும், தனமே அக்நி ஜ்வாலையாயும் இருக் கின்றது. இந்த தனத்தினால், தந்தை குமாரர்கள் சகோ தரர்கள் சினேகிதர்கள் பந்துக்கள் முதலானவர்களெல் லோரும் விரோதமாகின்றார்கள். அல்ப புத்தியுடைய வர்கள், பார்யாள் புத்திரர்களின் சௌக்யத்தை விரும்பு கின்றார்களே யன்றி பகவான் மீது பிரீதிவைத்து பூஜை செய்யார்கள். அக்நியானது, எல்லாவற்றையும் பஸ்மம் செய்வதுபோல் எண்ணங்கள், மானவ ஜனங்களை பஸ்மம் செ[illegible]க்கின்றது. ஆசையுடையவன், தனவானா யிருந்த போதிலும் தரித்திரனே. தான் செய்த பிழைகள், அன்னி யர்களுடன் சொல்லி பச்சாதாபப் பட்டால் பாபம் நாச மாகும். தாய் தந்தையர்களினுடையவும் பந்து சினே கிதர்களினுடையவும் சௌக்கியத்திற்காக, பாடுபடாமல் தன் பிராண பிரயாணத்திற்கு வேண்டிய சாதனைகளுக்கு பாடு படவேண்டும். இத்தேகம், இந்த க்ஷணமோ சற்று நேரத்திலோ இன்றோ மறுநாளோ மண்ணாவது நிஜ மென்று, பிரதி இமை கொட்டுநேரமும் நினைத்து ஜாக்

கிரதையுடன் இருக்கவேண்டும். நாம் இவ்வளவாய் மோகம் வைத்திருக்கும் இந்த ஜகத்தெல்லாம், சொப்பனம் போன்றதாயிருக்கின்றது. உன் கண்களாகிலும் கைகளாகிலும் நல்ல விஷயங்களுக்குத் தடைசெய்தால், அதைப் பிடுங்கியும் வெட்டியும் போடவேண்டும். மானவர்களின் சரீரம், எலும்பு மாமிசம் தோல் ரத்தம் சீழ் மலமூத்திரங்களால் நிறைந்து, அழியத்தக்க தோல் பொம்மையா யிருக்கின்றது. பால்யமும் யௌவனமும் நிற்கமாட்டா. பிறப்பது வளருவது நோய் உண்டாவது மரணமடைவது முதலானவைகள் துக்கமானவைகளே. மதுரமாகிய பதார்த்தத்தில் ஒருதுளி விஷம் விழுந்து அதைத் தெரியாமல் சாப்பிட்டால் பிராணன் போவதாயிருக்க,கணக்கற்ற பாபங்களைச் செய்து விஷத்திற்குச் சமானமாகிய விஷய சுகங்களை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் என்ன கதியை அடைவார்கள். சகல பிராணிகளையும் நம்மைப் போல் நினைத்து, ஜீவயிம்சை செய்யாமலிருக்கவேண்டும். ஜீவயிம்சை செய்யாமலிருந்தால் சீக்கிரமாய் பகவான் சமீபமாய்ச் செல்லுவோம். பூததயையிருந்தால், இந்திரியங்களின் சேஷ்டைகளும் குரோதங்களும் நீங்கும். ஜீவயிம்ஸை வியபிசாரம் திருடுவது குடிப்பது மாம்ஸபோஜனம் செய்வது இவ்வைந்தும் தேகத்தினால் செய்யப்படும் கார்யமாயிருக்கின்றது. பொய்சொல்வது, நடவாத விஷயங்களை கோர்த்துச் சொல்லுவது, தூஷிப்பது, விருதாவாய்ப் பேசுவது இந்நான்கு பாபகார்யங்களையும் நாக்கினால் செய்யப்படும் கார்யமாயிருக்கின்றது. காம, குரோத, லோப, மோஹ, மத, மச்சர, டம்ப, தர்ப்ப, ஈரிஷை, அசூயை என்னும் கெட்டகுணங்களையும், துன்மார்க்க காரியங்களையும் மிகவும் சீக்கிரமாய்ச் செய்ய மனதே காரணமாயிருக்கின்றது.

இப்படி துன்மார்க்க விஷயங்களில் ஓடிக் கொண்டிருக்கும் மனதை, இழுத்துப்பிடித்து நல்ல காரியங்களைச் செய்வதில் பிரவேசிக்கச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால், பகவத் சொரூபத்தில் மனம் லயமாகும். நிதானமுடைய வனே பலமுடையவன். சரியாய் மூடாத வீட்டில் எப் படி மழை ஒழுகுமோ அதுபோல் ஜாக்கிரதையில்லாத மன திற்கு, கெட்ட குணங்கள் வந்துக்கொண்டேயிருக் கும். மனிதர்கள், முத்துக்காக ஆசைப்பட்டு அதிக கஷ் டத்துடன் பிராணண் போவதாயிருந்தபோதிலும் துணிந்து அகோரமான பயங்கரமுடைய சமுத்திரத்தில் இறங்கி முத்துகளை எடுப்பதுபோல், பகவானை தரிசனம் செய்ய வேண்டுமென்று நினைக்கப்பட்ட புருஷன், சிரத்தை பக்தி உண்டாவதற்காக அநேக கஷ்டங்கள் பட்டே தீர வேண்டும். ஸர்வம் தெரிந்தவனைப்போல் நடித்துக்காட்டும் புருஷன், நீச குணங்களையுடையவனேயாம். சந்தோஷம், நல் விஷயங்களிலிருந்து உண்டாகும்; துக்கம், கெட்டவிஷ யங்களிலிருந்து உண்டாகும். பிரியத்தினால்கோபமும், நல்ல விதத்தினால், கெடுதியையும், தர்மத்தினால் லோபகுணங்களை யும், விசாரணையினால் மோகத்தையும், ஸத்தியத்தியத்தினால் பொய்யையும் ஜயிக்கவேண்டும். நல்ல ஸஹவாஸம் கிடைக் காவிட்டால், வேறு எந்த ஸஹவாஸமும் செய்யலாகாது. துஷ்டர்களைக்கண்டால் பயந்திருக்கவேண்டும்; அநேக தேசங்களை ஜயித்தவன், வீரனென்று பெயர் பெறு வான். தனது இந்திரியங்களை ஜயித்தவன், பிரம்மாண்டமெ ல்லாம் ஜயித்தவனாகின்றான். இந்திரியங்களையும் மனதையும் தனது அப்பியாச யோகத்தினால், ஜயிக்கவேண்டும். தன வான் மோக்ஷமடைவது எப்படியிருக்குமென்றால், ஊசி காதில் யானை புகுர்வதுபோல் யிருக்கும். என்றால், தன வான் மோக்ஷம் அடைவதும் இல்லை. ஊசி காதில் யானை புகுர்வதும் இல்லை. தனவான் எப்பொழுதும் பணத்தின் மீதே இச்சை கொண்டிருப்பானே யொழிய மோக்ஷத் தின்மீது இச்சை கொண்டிரான். நாம் செய்யும் நல்வினை தீவினைகள் இரண்டும், நம்முடன் கூட நிழலைப்போல் வந்து

கொண்டேயிருக்கும். ஆதலால், கல்மஷ குணங்களையெல்லாம் நீக்கிக்கொண்டே வரவேண்டும். திருட்டுத்தனத்தையும் பொய்யையும் விடவேண்டும். இதரர்களை பரிகாசம் செய்யவேண்டாம், ஏனென்றால் பரிஹாசம் செய்யும் தப்பிதங்கள் உன்னிடம் இல்லாமலிராது. காமக்ரோதாதிகளை விடவேண்டும். இந்தக் காமக்ரோதாதி குணங்களை ஜீவப் பிரம்மைக்ய வேதாந்த ரஹஸ்யத்தில் காணலாம். சகல ஆசைகளும் தன் பிராணனுக்கு விஷம் போன்றது அந்த ஆசையே, ஜனங்களுக்கு மிகவும் முக்கியமானதாயிருக்கின்றது. அதனால் கேடுவரும் என்பதை நினைக்கமாட்டார்கள். கோபத்துடன் வார்த்தையாடும்வார்த்தைகளெல்லாம், கூரான அம்பைவிட மிகவும் கூர்மையானது. நரகத்திற்குப் போகும் பாட்டை, மிகவும் விசாலமாயிருக்கும்; மோக்ஷத்திற்குப்போகும்பாட்டை மிகவும் இடுக்காயிருக்கும். சிருவர்களுக்கு, ஸம்சாரசுகத்தின் ருசி தெரியாததுபோல், பிரபஞ்ச சுகத்திலிருப்பவர்களுக்கு பிரம்மானந்த ருசிதெரியவாராது. பரம், நித்யானந்தம். இஹம், க்ஷணபங்கம். துக்கத்திற்குக் காரணம் பாபம், சுகத்திற்குக் காரணம் புண்ணியம். பால்யத்தில் ஆட்டங்களிலும், யௌவ்வனத்தில் ஸ்திரீகளிடத்திலும், கிழத்தனத்தில் பார்யாள் புத்ர பௌத்ர பந்துக்களிடத்திலும், விசேஷ ஆசையுடையவர்களாயிருந்து காலம் விருதாவாய்க் கழித்து விடுகின்றார்கள். வித்தை தனம் கீர்த்தி பரிவாரங்கள் எவ்வளவு யிருந்தபோதிலும், மரணகாலத்தில் காப்பாற்ற மாட்டா. ஆதலால், மருஜனனம் வாராமலிருப்பதற்காக முதல், இக்கிரந்தகர்தாவாகிய அடியேன் மானஸபூஜை செய்துவந்ததுபோல் பன்னிரெண்டு வருடங்கள் மானஸ பூஜை செய்துவநதால், இச்ஜன்மம் தவறினாலும் மறுஜன்மத்திலாகிலும் அல்லது அடுத்த ஜன்மத்திலாகிலும் தப்பாமல் மோக்ஷமென்னும் பதவியை அடையலாமென்று அரியக்கடவீர்களாக.

5—8—1922, கடப்பை. } ஸச்சிதானந்தன்.

24 NOV 1922